
# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல் - 15

## ஊராட்சி மன்றத்திற்கு 29 துறைகளுக்கான அதிகாரம் தேவை



தமிழக ஊராட்சி அரசாங்கப் பெண் தலைவர்களின் கூட்டமைப்பு

# இந்தியாவில் உள்ளாட்சிகளில் பெண் பிரதிநிதிகள் அதிகம்

உள்ளாட்சி அமைப்புகளில் தலைவி, உறுப்பினர் பதவியில் உள்ள பெண்கள் எண்ணிக்கை, மற்ற நாடுகளை விட, இந்தியாவில் அதிகம்.

மத்திய பஞ்சாயத்து ராஜ்அமைச்சகம் நடத்திய சர்வேயில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் டில்லியில் ஊராட்சி அமைப்புகளில் உள்ள பெண் பிரதிநிதிகள் பங்கேற்ற கருத்தரங்கம் நடந்தது. உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பெண்கள், தங்கள் பொறுப்பை சிறப்பாக செய்து, சாதித்து வருவது பற்றி கருத்தரங்கில் பேசப்பட்டது.

இந்தியாவில் பஞ்சாயத்து ராஜ் சட்டம், 1992ல் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம், உள்ளாட்சி அமைப்புகளில் போட்டியிட பெண்களுக்கு 33 சதவீதம் இடங்களை ஒதுக்க வகை செய்யப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளில் தலைவிகள், உறுப்பினர்கள் என்று, இப்போது 10 லட்சம் பெண்கள் பொறுப்பில் உள்ளனர். பீகார் மாநிலத்தில், பெண்களுக்கு 50 சதவீதம் இடங்கள் ஒதுக்கப்படுகிறது; அங்கு, இப்போது உள்ளாட்சி அமைப்புகளில், 54 சதவீதம் பேர் பெண்கள். மற்ற நாடுகளை விட, இந்தியாவில் தான் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்கள் அதிகம் உள்ளனர்.

ஊராட்சி தலைவிகள் சாதனைகள் பற்றிய குறும்படமும் கருத்தரங்களில் காட்டப்பட்டது. அதில், பீகார் மாநிலம், நவாடா மாவட்டம், லோகர்புரா ஊராட்சி தலைவி வீணா தேவி என்ற பெண் எப்படி சாதித்தார் என்பது பற்றி காட்டப்பட்டது.

வீணா தேவி, 12 வயதில் திருமணம் செய்து, 16 வயதில் கணவனை இழந்தவர். உள்ளாட்சி அமைப்பில், இரண்டு முறை தேர்தலில், பொது வார்டில் நின்று, ஆண் வேட்பாளரை தோற்கடித்தார். அவர் கூறுகையில், ''முன்பெல்லாம் ஒரு பெண் கூட, பீகாரில் தேர்தலில் நிற்க முடியாது; இப்போது அப்படியில்லை. எங்களால் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்து வருகிறோம்'' என்றார்.

'உள்ளாட்சி அமைப்பில் தேர்வு செய்யப்படும் பெண்கள், ஊராட்சி தலைவி என்று சொல்லிக்கொண்டாலும், அவர்கள் ''ரப்பர் ஸ்டாம்ப்'' பாகத்தான் இருக்கின்றனர்; அவர்கள் கணவர்கள் தான் ஆதிக்கம் செலுத்துகின்றனர் என்று கூறும் புகார்களுக்கு, இந்த பெண்கள் பதிலடி தருகின்றனர். அவர்களின் சாதனையை விளக்கத்தான் படம் எடுத்தோம் என்று, குறும்படம் எடுத்த பூஜிதா சவுத்ரி கூறினார்.

**தினகரன், 27.3.08**

# தமிழக ஊராட்சிகளின் இன்றைய நிலை

**– வள்ளிநாயகம்**

நமது நாட்டின் அரசியல் அமைப்பு சட்டத்தில், கொண்டு வரப்பட்ட 73வது அரசியல் சட்டத்திருத்தம்'' நாட்டின் பஞ்சாயத்து அமைப்பு முறைக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சட்டத் திருத்தத்தின் படி மாநில அரசுகள் தங்கள் பகுதியில் ஓர் ஆண்டிற்குள் பஞ்சாயத்திற்கு என்று ஒரு தனி சட்டம் உருவாக்க வேண்டும், அல்லது ஏற்கெனவே இருக்கும் சட்டத்தை 73வது அரசியல் சட்டத்திருத்ததுக்கு ஏற்ப மாற்ற வேண்டும். தமிழ்நாடு அரசு ஏற்கனவே அமுலில் இருந்த 1958 ஆண்டு சட்டத்தை ரத்து செய்து தகுந்த மாற்றத்தை ஏற்படுத்தி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994ஐ இயற்றியது. தமிழகத்திற்கான ஊராட்சிகள் சட்டம் 24.4.1994 அன்று அமுலுக்கு வந்தது. இந்த சட்டம் குறித்து சட்ட மன்றத்தில் உரிய முறையில் விவாதிக்கப் படவில்லை. இச்சட்டம் குறித்து பரிசீலனை செய்ய எந்த குழுவும் அமைத்து பரிந்துரை பெறப்படவில்லை ஒரு ஆண்டு கால கெடு முடிய ஒரு நாளைக்கு முன்பாக சட்டம் நிறைவேற்றப்பட்டு உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த புதிய சட்டத்தில் 262 பிரிவுகள் இருந்தது. அதில் 214 பிரிவுகள் பழைய சட்டத்தில் உள்ளவைதான். ஒரு வார்த்தை கூட மாற்றப்படாமல் அப்படியே எடுத்துக்கொள்ளப்பட்டது. 48 பிரிவுகள் மட்டுமே புதிதாக சேர்க்கப்பட்டன. அவை, 73வது சட்டத்திருத்தின் மூலம் கொண்டுவரபட்ட மாற்றங்களான கிராம சபை, மாவட்ட பஞ்சாயத்து, பெண்களுக்கான இட ஒதுக்கீடு, பட்டியில் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு, மாநில தேர்தல் ஆணையம், மாநில நிதி ஆணையம் ஆகியவை பற்றியவை ஆகும். வேறு ஒன்றும் புதிதாக சேர்க்கப்படவில்லை. பஞ்சாயத்துகளுக்கு, கேரளா, கர்நாடகா போன்ற மாநில சட்டங்களில் அதிகாரம் வழங்கி பட்டியல் சேர்க்கப்பட்டது போல எதுவும் இந்த புதிய சட்டத்தில் சேர்க்கப்படவில்லை. மாவட்ட ஊராட்சி என்பது ஒரு ஆலோசனை கூறும் அமைப்பாகவே இச்சட்டம் வரையறுத்துள்ளது. இது அரசியல் சட்டத்தில் கூறப்பட்ட கருத்துக்கு முரணானது.

அடிப்படைக் கல்வி 1981ல் ஊராட்சியிடம் இருந்து பறிக்கப்பட்டது. 1982ல் பொது சுகாதாரம் ஊராட்சியிடம் இருந்து பறிக்கப்பட்டு, சுகாதாரத்துறைக்கு கொடுக்கப்பட்டது. இதைப் போலவே வேளாண்மை, கூட்டுறவு, பால் வளம் போன்ற துறைகள் ஊராட்சியிடம் இருந்து பறிக்கப்பட்டது.

ஊராட்சி என்பது உள்ளூர் அரசாங்கம். அதில் மக்கள் நேரடியாக பங்கேற்று சிறப்பான பணி ஆற்ற முடியும். ஊராட்சியை நன்கு செயல்படுத்தினால், கிராம சபையினை நன்கு பயன்படுத்தினால், ஒளிவு மறைவற்ற ஊழலற்ற ஒரு ஆட்சியை அமைக்க முடியும். இதனால், ஏழை மக்கள் பயனுறுவர். ஆனால் அடிப்படைத்துறைகள் அனைத்தும் ஊராட்சிகளிடமிருந்து எடுக்கப்பட்டு, தனித்தனி துறைகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

1990ல், ஊராட்சிக்கு நிதி வழங்குதல் குறித்து அப்போதைய அரசால் அமைக்கப்பட்ட தாமோதரன் குழு ஊராட்சிகள் நிதி நிலை குறித்து ஆய்வு நடத்தியது. அந்தக் குழுவில் அப்போதைய ஊரக வளர்ச்சித் துறை இயக்குனர் உள்ளிட்ட பல அதிகாரிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தனர். ஆய்வின் அடிப்படையில் சில குறிப்புகளை அனுப்பினார்கள். அதில் ஊராட்சி ஒன்றியங்கள், அடிப்படைக் கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் மகத்தான சாதனை நிகழ்த்தியிருக்கின்றன. ஆனால் தற்போது இத்துறைகள் ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து நீக்கப்பட்டது முறையானதல்ல, நாட்டில் ஏழ்மை குறைக்கப்பட வேண்டுமானால், ஏழை விவசாயிகள் பயன்பெற வேண்டும். இத்துறைகள் ஊராட்சி ஒன்றியத்தினிடமே இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆனால் இதுவரை இந்த பரிந்துரையின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**[*20.12.2007 அன்று சென்னையில் நடைபெற்ற தமிழக உள்ளாட்சி அரசாங்க அமைப்பில் தேவைப்படும் சீர்த்திருத்தங்கள் பற்றிய கருத்தரங்கில் திரு.வள்ளிநாயகம் – பகிர்ந்துகொண்டது.]**

ஆதே போல் 1998ல் ஊராட்சிக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரம் குறித்து ஆய்வு செய்ய ஒரு குழு திரு. L.C ஜெயின் தலைமையில் அமைக்கப்பட்டது. இந்தக்குழு, பிரச்சனைகளை விரிவாக ஆராய்ந்து ஒரு அறிக்கையினை அளித்தனர். அதில் ஊராட்சிகளுக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும், எப்போழுது வழங்கப்பட வேண்டும் அதற்கான வழிமுறைகள் என்ன என்பது குறித்து பிரமாதமான அறிக்கையினை வழங்கினார்கள். இந்த அறிக்கையும் இன்னும் செயல்படுத்தப்பட வில்லை.

அரசியல் சட்ட பிரிவு 243 Gல் ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது அரசியல் சட்டத்தின் XI வது அட்டவணையில் 29 அதிகாரங்களை பட்டியலிட்டுள்ளது. ஊராட்சிகள் என்பது மூன்றாம் அரசாங்கம், ஆனால் அதற்கான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இப்பிரச்சனை குறித்து ஆந்திர உயர்நீதிமன்றம் ஐந்து நீதிபதிகள் கொண்டு பெஞ்ச் அளித்த தீர்ப்பில், மாநில அரசுகள் ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்பதை அரசியல் சட்டம் கூறுவதாக கருத்து தெரிவித்தனர். எனினும் இது பற்றி முடிவை மாநில அரசுகள்தான எடுக்க வேண்டும் எனவும் தாங்கள் மாநில அரசை இது பற்றி கட்டாயப் படுத்த முடியாது எனவும் 4 நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர். ஆனால் ஒரு நீதிபதி மட்டும் உரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை எனில் ஆந்திர மாநில பஞ்சாயத்துகள் சட்டம் செல்லாது எனவும் தீர்ப்பளித்தார்.

நமக்கான உரிமைகளை நாம் போராடிப் பெற முடியும். கிராம சபைக்கு உள்ள அதிகாரங்களை கேட்டு செயல்பட வேண்டும். கிராம சபையில் அனைத்து வக்காளர்களும் அங்கத்தினராக உள்ளனா ஊராட்சிமன்றக் கூட்டத்தில் அனைவரும் பங்கேற்க முடியாது, ஆனால் கிராம சபை கூட்டத்தில் அனைத்து வாக்காளர்களும் பங்கேற்கலாம். பஞ்சாயத்தில் நடைபெற்ற வேலைகளை கிராம சபையில் ஆய்வு செய்யலாம். அதே போல அரசும் அரசுத்துறைகளும், அரசு சார்ந்த நிறுவனங்களும் செய்த பணிகளை கூட கிராம சபை ஆய்வு செய்யலாம். இதற்காக அரசு விதிகள் இயற்றி உள்ளது.

ஊராட்சி அரசாங்கம் சுயமாக செயல்பட அதிகாரம் வழங்காமல் உள்ளதற்கு அரசியல் உறுதியற்ற தன்மையே காரணம். உள்ளாட்சி அமைப்பின் மூன்று முக்கிய தேவைகள் நிதி, அதிகாரம், மற்றும் பணியாட்கள். இவை கேரளா, மஹராஷ்டரா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் முறையாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழகத்தில் இதுவரை இது முறையாக வழங்கப்படவில்லை, வெறும் அரசு உத்திரவாக மட்டும் வெளியிடபட்டுள்ளது. தமிழக ஊராட்சிகள் சட்டத்தில் கூறியபடி அறிவிக்கைகள் மூலம் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை.

மாநில நிதி ஆணையப்பரிந்துரைகள் தமிழ்நாட்டில் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. மத்திய அரசு மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை அப்படியே ஏற்றுக் கொள்கிறது. ஏற்று கொள்ளப்பட்ட பரிந்துரைகளும் முறையாக செயல்படுத்தப் படவில்லை என மூன்றுவது நிதி ஆணையம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது.

முதல் நிதி ஆணையம் முதல் ஆண்டு 8%ல் தொடங்கி ஒவ்வொரு ஆண்டும் 1% கூட்டி கடை ஆண்டு 12% வரை வழங்கலாம் என்று கூறியது, ஆனால் இதை முழுமையாக ஏற்றுக்கொள்ளாமல் 8% துடன் நிறுத்திக்கொண்டது. இரண்டாவது நிதி ஆணையம் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு 8%, பின்பு 9%, ஐந்தாவது வருடம் 10% வழங்கலாம் என பரிந்துரைத்தது. ஆனால் அரசு 8%ம் தான் வழங்கியது.

தமிழகத்தில் ஒரு ஊராட்சிக்கு 1996–1997 ஆண்டுகளில் சராசரி வருமானம் 1.24 லட்சம், அதில் செலவு செய்யபட்டது 1.06 லட்சம். அதே போல் 1999–2000 ஆண்டில் சராசரி வருமானம் 3.04 லட்சம் என்றாலும், 3.64 லட்சம் செலவாகி பற்றாகுறை ஏற்பட்டுள்ளது. மாநில நிதி ஆணைய பரிந்துரைக்கு பின்னர் வருவாய் அதிகாமானாலும் செலவும் அதிகாரித்து பற்றாக்குறையாகவே உள்ளது. ஒதுக்கப்படும் நிதியில் 50 முதல் 60% மின் கட்டனத்திற்கே செலவாகிறது ஒரு யூனிட் ரூ.1.60 இருந்து ரூ.3.40 காசுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. பஞ்சாயத்து மின் இணைப்பிற்கு வர்த்தகத்திற்கு

வழங்கப்படும் மின் கட்டண அளவை வைத்துள்ளனர் ? ஊராட்சி என்பது வர்த்தக மையம் அல்ல, சேவை மையம் என்பதை அரசு உணர வேண்டும். கேரளா, கர்நாடகா, மஹாராஷ்டிராவில் ஊராட்சிக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ரூ.1 தான் வசூல் செய்யப்படுகிறது.

மக்களுக்கு சேவை செய்ய வாய்ப்புள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரமும், நிதியும் வழங்காமல் மாநில அரசு உள்ளது. மக்கள் தம் உரிமைகளை பெற, ஊராட்சியின் அதிகாரங்கள் பரவலாக்கிட இக்கருத்துப் பிரச்சாரத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும்.

ஊராட்சிகளிடம் இருந்த பல அதிகாரங்களை ஊராட்சிகள் சட்டம் 1994 பறித்துள்ளது. 1958ல் இயற்றப்பட சட்டத்தில் என்ன அதிகாரம், உரிமைகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டதோ, அதை தற்போது மீண்டும் தந்தாலே அனைத்து ஊராட்சிகளும் சிறப்பாக செயல்பட முடியும்.

1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டம் அமுலில் இருந்தது போது பல துறைகள் ஊராட்சியிடம் இருந்தது. மருத்துவமனை மற்றும் பள்ளிக் கூடங்கள், அரசு நடத்தியதைவிட மாவட்ட ஊராட்சிகள் நடத்தியதே அதிகம். 73வது சட்டத்திருத்தின் படி கொண்டுவரப்பட்ட தமிழக ஊராட்சிகள் சட்டம் முன்பு இருந்த உரிமைகளைப் பறிப்பதை தவிர புதிதாக எந்த உரிமையையும் ஊராட்சிகளுக்கு தரவில்லை. சுகாதாரம், வேளாண்மை, அடிப்படைக்கல்வி, மருத்துவம் கூட்டுறவு முதலியவை ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

## ஊராட்சி பிரதிநிதிகளில் படிக்காதவர்கள் எத்தனை பேர் ?

நாட்டில் உள்ள 28லட்சம் ஊராட்சி பிரதிநிதிகளில் 38 சதவீதத்தினர் வறுமைக்கோட்டிற்கும் கீழ் இருக்கிறார்கள். 18.8 சதவீதம் பேர் படிக்காதவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட 12 லட்சம் பெண்களில் 58 சதவீதம் பேர் குடும்பத்தலைவிகள். படிப்பை பொறுத்தவரையில் ஆண்களை விட பெண்கள் மிகவும் பின் தங்கியுள்ளனர்.

ஊராட்சி அமைப்புகளின் பெண் ஊராட்சி பிரதிநிதிகளின் நிலைமையை பற்றிய அரச அறிக்கையில் இது தெரியவந்துள்ளது. ஊராட்சி பிரதிநிதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் ஆண்களை விட பெண்கள் அதிகம். வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ளவர்கள் பெண்கள் 38.1 சதவீதம்; ஆண்கள் 36.5 சதவீதம். 48.2 சதவீதம் உயர்நிலை வகுப்புக்கு மேல் படித்தவர்கள். 18.8 சதவீதம் பேர் எழுத்தறிவு அற்றவர்கள். 2.3 சதவீதம் பெண்கள் திருமணமாகாதவர்கள், 5.4 சதவீதம் பேர், மனைவி மற்றும் கணவனை இழந்தவர்கள். 1.3 சதவீதம் பேர் விவாகரத்து செய்து கொண்டவர்கள். ஊராட்சி பிரதிநிதிகளில் இந்துக்கள் 85.6, முஸ்லீம் 6.5, கிருத்துவர்கள் 3.6, சீக்கியர்கள் 3.6, ஜைனர்கள் 0.2 சதவீதத்தினர். 32.9 சதவீதத்தினர் பிற்படுத்தப்பட்டவர்கள். 25 சதவீதத்தினர் தலித் மற்றும் 13 சதவீதத்தினர் ஆதிவாசிகள். மற்றவர்கள் 28.4 சதவீதத்தினர்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**( தினமலர், 03.05.2008 )**

# சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்

## முன்னெழும் தொடர் கேள்விகள்

### சிறப்பு பொருளாதார மண்டலம் என்றால் என்ன ?

சிறப்பு பொருளாதார மண்டலம் என்பது குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட நிலத்தை தனியார் நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு உடமையாக்குவது, இந்நிலமையானது வர்த்தகம், சுங்கவரி உள்ளிட்ட நோக்கத்திற்காக அயல் நாட்டிற்கு உட்பட்ட பகுதியாக கருதப்படும். சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கு வருமானவரி, விற்பனை வரி, சேவை வரி, மற்றும் சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சிறப்பு பொருளாதார மண்டல சட்டமானது 2005 ஜூன் மாதத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, 2006 பிப்ரவரி முதல் அமுலுக்கு வந்தது, இருப்பினும் குஜராத் போன்ற சில மாநிலங்களில் 2004லேயே சிறப்பு பொருளாதார மண்டல சட்டம் இயற்றப்பட்டது.

தொழிற்மயத்தின் பார்வையில், சிறப்பு பொருளாதார மண்டலத்தின் நோக்கமானது நாட்டின் ஏற்றுமதியை உயர்த்துவதற்கான தொழிற்சாலை பகுதியை அதன் முழு கட்டமைப்புடன் உருவாக்குவது.

### சிறப்பு பொருளாதார மண்டலம் ஏன் ?

'ஏற்றுமதியை உயர்த்ததான்' நாடுமுழுவதும் சிறப்பு பொருளாதார மண்டலம் உருவாக்குவதற்கான அரசின் நோக்கம். சிறப்பு பொருளாதார மண்டலங்களின் மூலம் இந்திய உள்நாட்டு பொருள் உற்பத்தி 2 சதவீதம் (GDP) சதவிகிதமும் உயர்ந்துள்ளதாகவும், 30 லட்சம் வேலை வாய்ப்பு உருவாகியுள்ளதாகவும், நாட்டின் ஏற்றுமதி 5 மடங்கு அதிகரித்துள்ளதாகவும் மத்திய வர்த்தகம் தொழில்துறை அமைச்சர் கமல்நாத் கூறுகிறார். அந்நிய நேரடி முதலீட்டின் மூலம், உலக உற்பத்தியை சிறப்பு பொருளாதார மண்டலத்தின் மூலம் இடிக்க முடியும் என்றும் இதன் மூலம் புதிய தொழில் நுட்பம் வளர்வதோடு, உள் கட்டமைப்பதற்கான வாய்ப்புகளும் பெருகும் என்று அரசு கூறுகிறது.

**மத்திய பொருளாதாரம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் தகவலின் படி 2007, நவம்பர் 30 வரை சிறப்பு பொருளாதார மண்டலத்தின் எண்ணிக்கை**

| | |
|---|---|
| சிறப்பு பொருளாதார சட்டம் 2005 வருவதற்கு முன்பே உள்ள சிறப்பு பொருளாதார மண்டலம் | 19 |
| அதிகார பூர்வமான அறிவிக்கட்ட சிறப்பு பொருளாதார மண்டலம் | 172 |
| அறிவிக்கப்படவுள்ள சிறப்பு பொருளாதார மண்டலம் | 404 |
| சிறப்பு பொருளாதார மண்டல 2005 சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை | 165 |
| **மொத்தம்** | 760 |

மேலும் பல சிறப்பு பொருளாதார மண்டல முறையீடுகள் நிலுவையில் உள்ளன. சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கான இந்திய நாட்டின் 20 மாநிலங்களில் தாரைவார்க்கப்பட்டுள்ள நிலங்களின் அளவு 2,00,000 ஏக்கர் ஆகும். இது இந்திய தலைநகரின் மொத்த பரப்பளவை போன்றது. இந்நிலங்கள் யாவும் விவசாய விளை நிலங்களாகவும், பன்முக பயிர் சாகுபடி நிலங்களாகும். இவை ஒரு மில்லியன் டன் உணவு தானியங்களை தயாரிக்கும் திறன் கொண்டது. சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அதிகரித்தால் இதற்காக விளை நிலங்கள் கையகப்படுத்துவது தொடர்ந்தால், நாட்டின் உணவு பாதுகாப்பு என்பது பாதிப்படையும்.

## இடப்பெயர்ச்சி மற்றும் வாழ்வாதார இழப்பு

சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு கையகப்படுத்தப்படும் நிலங்களின் அடிப்படையில் 114,000 விவசாய குடும்பங்கள் (ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 நபர்கள்) மற்றும் விவசாயத்தை நம்பி பிழைக்கும் 82,000 விவசாய கூலிகளின் குடும்பங்கள், இடம் பெயர்கிறார்கள். அதாவது, குறைந்தபட்சம் 10 லட்சம் விவசாய மக்கள் தங்கள் வாழ்வாதார பகுதியில் இருந்து வெளியேற்றப்படுவார்கள். பொருளாதார நிபுணர்களின் கருத்துப்படி விவசாய மற்றும் விவசாய கூலிகள் குறைந்தபட்சம் 212 கோடி ரூபாயினை ஆண்டு ஒன்றுக்கு நஷ்டமடைவார்கள். இதில் கிராமப்புற உற்பத்தி வீழ்ச்சியால் ஏற்படும் நஷ்டத்தை உள்ளடக்கவில்லை.

மக்கள் இடமாற்றத்திற்கான நிவாரணமும், புது வாழ்விடமும் வழங்கப்படும் என அரசு வாக்குறுதி அளிக்கிறது. எனினும் அரசு தன் வாக்குறுதிகளை நிறைவேற்றியதற்கான வரலாற்று பதிவுகள் எதுவும் இல்லை. பெரும் வளர்ச்சி திட்டத்திற்காக, 1950 முதல் இதுவரை 40 மில்லியன் மக்கள் தங்கள் நிலங்களை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். (இதில் 40 சதவீதம் பேர் ஆதிவாசிமக்களும், 25 தலித்துக்களும் ஆவர்) இதில் குறைந்தபட்சம் 75 பேர் இன்னும் மறுவாழ்வாதாரத்தை பெறவில்லை. நாட்டின் 80%மான விவசாய மக்களுக்கு சொந்தமாக 17 விவசாய நிலம் மட்டுமே உள்ளது. இதையும் பிடுங்கி நிலமற்றவர்களாக அரசு மாற்றுகிறது.

புதிய நிவாரணம் மற்றும் மறுவாழ்வு கொள்கை என்பது பாராளுமன்றத்தில் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. “சமூக தாக்க மதிப்பீடு” என்பது வளர்ச்சி திட்டத்திற்காக மக்களை கட்டாயமாக வெளியேற்றும் போது செய்யப்படும் என்று உறுதியளித்துள்ளது. மேலும் இடமாற்றத்தின் போது நஷ்டஈடு, மறுவாழ்வு மற்றும் மாற்றுக் குடியிருப்பு செய்யப்படும் என்று உறுதியளித்துள்ளது.


இந்த உத்திரவாதம் என்பது நிலமற்ற ஏழை கூலி விவசாயிகளுக்கு பொருந்தும், சிறப்பு பொருளாதார மண்டலத்தினால் நடைபெறும் கட்டுமான பணிகளிலும் வேலையளிப்பதற்கும், பிற வகையான சுய தொழில் பயிற்சி வழங்கவும், நிலவுடமையாளர்கள் இழக்கும் நிலங்களுக்கு மாற்று பகுதியில் நிலம் வழங்கப்படும் என்றும் மாற்றப்படும் SC/ST மக்களுக்கு சிறப்பு மறுவாழ்வு வாய்ப்புகளும் வழங்கப் படும் என்று கூறியுள்ளது. இக்கொள்கைகள் யாவும் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## சிறப்பு பொருளாதார மண்டலம் வேலையை உருவாக்குகிறதா ?

அமைப்பு சார்ந்த தொழில் துறையில் வேலைவாய்ப்பு வளர்ச்சி என்பது 1991ல் கொண்டு வரப்பட்ட (உலகமயமாக்கல் கொள்ளை பொருளாதார சீர்த்திருத்தத்திற்கு பிறகு மிகவும் குறைந்துள்ளது.) அமைப்பு சார்ந்த துறையில் ஒட்டுமொத்த வேலைவாய்ப்பு என்பது 3 கோடிக்கும் குறைவாகவே உள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு அதிக வாய்ப்புள்ளதாக கருதப்படும் தொழில்நுட்பம் (IT) மற்றும் (IT&S) அதன் சார்ந்த துறைகளில் கூட வேலைவாய்ப்பு என்பது 0.15 கோடிக்கும் குறைவாகவே உள்ளது. இந்திய தொழிலாளி மக்களின் எண்ணிக்கை 45–55 கோடியாக உள்ளது. வளர்ந்து வரும் இயந்திரமயமாதலும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும், வேலையின்மை உலகமயமாக்கியுள்ளது. இந்தியாவில் ஆட்டோ மொபைல் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், தொழிலாளர் எண்ணிக்கை குறைந்துள்ளது. இயந்திரமயமாக்கல், அமைப்பு சார்ந்த துறையிலும் அதிக தொழிலாளர்களின் தேவை குறைந்துள்ளது. நவீன தொழில்சாலைகளும் சேவை துறைகளும் சிறப்பு பொருளாதார மண்டலத்தால் அதிகரித்தாலும், இதனால் வேலை வாய்ப்பு என்பது பெருக வாய்ப்பில்லை. மேலும், உருவாகும் குறைந்த வேலை வாய்ப்பும், கிராமப்புறம் சார்ந்த தொழிலாளர்களுக்கு வாய்ப்பு அளிக்காமல், அதிக திறன் சார்ந்தவர்களுக்கே வாய்ப்பளிக்கிறதே தவிர, நிலத்தை இழந்து நிற்கும் ஏழை கிராமப்புற மக்களுக்கு வாய்ப்பளிக்க வில்லை. சிறப்பு பொருளாதார மண்டலத்தால் சில ஆண்டுகளில் 30 லட்சம் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்று கமல் நாத் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குகிறார். அரசு குறைந்துள்ள வேலைவாய்ப்பு குறித்து எந்த தகவலையும் வழங்காமல், உருவாகும் சிறிய வேலைவாய்பை பற்றி மட்டுமே தகவல் அளிக்கிறது.



SEZ : நிலத்திற்குப் பதில் வேலைவாய்ப்பு–அரசு




ஆனால் இது தான் – உண்மை நிலை

நன்றி–" Rally"

சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு கையப்படுத்தப்பட்டுள்ள நிலங்களில், ஐம்பது சதவிகித நிலங்கள் தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதன் சார்ந்த சேவை துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்கு வேலைவாய்ப்பு என்பது நன்கு பயிற்சியளிக்கப்பட்ட கணி பொறியாளர்களுக்கே வழங்கப்படுகிறதே தவிர, நிலங்களை இழந்து வெளியேறிய விவசாய, விவசாய கல்வி தொழிலாளர்களுக்கு அல்ல.

மேலும், நொய்டா போட்னற சிறப்பு பொருளாதார மண்டலங்களில், வேலை சூழல் என்பது குறைந்த கூலி, அதிக வேலை நேரம், தொழில்சார்ந்த பாதிப்புகள் என இங்கு வேலை செய்பவர்களின் மனித உரிமைகள் பாதிக்கப்படுவதோடு, இத்துறையின் வளர்ச்சி என்பது ஏழை மக்களின் எந்த வளர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை.

**புதிய பன்னாட்டு நகரம் மாநிலம் ?**

மகா மும்பாய் சிறப்பு பொருளாதார மண்டலம் போன்று பல சிறப்பு பொருளாதார மண்டலங்கள் அரை நகரம் ஒன்றுள்ளது. மகா மும்பாய் (ரிலையன்ஸ் நிறுவனத்தால் கட்டமைக்கப்பட உள்ளது) நில அளவு 100 sq. km பரப்பளவு கொண்டது. இது சண்டிகர் நகரத்தின் அளவாகும். இங்கு மக்கள் தேர்ந்தெடுக்கும் உள்ளாட்சி அரசாங்கம் கிடையாது. அரசால் ஒரு “வளர்ச்சி ஆணையர்“ நியமிக்கப்படுவார், சிறப்பு பொருளாதார மண்டலத்தில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் வளர்ச்சி ஆணையர் செயல்படுவார். சிறப்பு பொருளாதார மண்டல பகுதியில் தொழிலாளர் நல சட்டங்கள் செல்லுபடியாகாது, தொழிற்சங்க நடவடிக்கை, வேலை நிறுத்தம், பேச்சுவார்த்தை அனைத்தும் சட்ட விரோதமாக்கப்பட்டுள்ளது. சாலை, மின்சாரம், தண்ணீர் விநியோகம் போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் முதலீட்டாளர்களுக்கு அரசு வழங்கும். ஆனால் அப்பகுதி வாழும் மக்களுக்கு வழங்காது. சிறப்பு பொருளாதார மண்டலத்தில் பல லட்ச மக்கள் வாழ்கிறார்கள். பணி புரிகிறார்கள். இம்மக்களுக்கு அத்தியாவசிய சேவைகள் புரிய வரி விதிக்கும் உரிமை வளர்ச்சி அதிகாரிக்கு உண்டு. இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் ஆகியவற்றில் உள்ள பொருளியல் சாராத நிலத்திற்கான அனைத்துச் சட்டங்களும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் பொருந்தும். ஆனால், உள்பாதுகாப்பு என்பது உரிமையாளரின் பொறுப்பாகும். இறுதியில் எல்லாவற்றிலும் மேலான மாநிலங்களாக வறுமையும் துன்பமும் உள்ள கடலில், வளமைக்கான புதையலாக அருகில் இருக்கும் பரந்துபட்ட மக்களுக்கு கட்டுப்படாமல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மாறுமா ?

**பொது வரி கிடையாது**

சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு வருமான வரி, விற்பனை வரி, சுங்கவரி, கலால் வரி மற்றும் சேவை வரிகளில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டிற்கு 1,60,000 கோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்படும் என்று நிதி அமைச்சர் கூறியுள்ளார். (சொகுசு தங்கும் விடுதிகள், வணிக வளாகங்கள், மனமகிழ் மையங்கள் போன்றவற்றிற்கும் இது பொருந்தும்). (நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் தன் சக கேபினட் உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிலங்கள், முதலீடு, உழைப்புச் செலவு போன்றவற்றின் தன்மையை மாற்றும். தொழில் மாற்றங்களை இது ஊக்குவிக்கும், இவற்றை நிறுத்தமுடியாது. இந்த நிலை நகரங்களின் உள்ளேயும் அதன் சுற்றுப்புறங்களிலும் இன்னும் அதிக சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்குவதன் மூலம் தீவிரமடையும் என்று குறிப்பிட்டிருக்கிறார்). ஒவ்வொரு வருடமும் வசூலிக்கப்படாமல் கைவிட்டுவிட்ட வரிப் பணம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யும் பணத்தைவிட 5 மடங்க அதிகமானது. இந்தப் பணத்தின் மூலம் ஒவ்வொரு இரவும் பசியோடு உறங்கச் செல்லும் 55 மில்லியன் மக்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் உணவளிக்கப்போதுமானது.

மேலும் உற்பத்தி மூலம் ஏற்றுமதி பொருட்களை தயாரிக்காத நிறுவனங்களுக்கும் இறக்குமதி வரி சலுகை அளித்துள்ளது. இதனால் பன்னாட்டு பரிவர்த்தனையில் நஷ்டம் ஏற்படுகிறது. கடந்த இறுதி 5 ஆண்டுகள் 1996–97ல் பன்னாட்டு பரிவர்த்தனையில், சிறப்பு பொருளாதார மண்டல நிறுவனங்களின் மூலம் இறக்குமதி சுங்கவரி என்பது 16461.58 கோடி ரூபாய் ஆகும். மறுபுறம் ஏற்றுமதியில் 13563.87 கோடி மட்டுமே வரி வந்துள்ளதாக உள்ளது. இம்மண்டலங்களுக்கு விற்பனை வரி, மற்றும் இந்தியாவில் வெளியில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கான வரி. இந்த வரி விளக்கு மண்டலத்தின் உற்பத்தி சாராத பிற நடவடிக்கைகளுக்கும் பொருந்தும். சிறப்பு பொருளாதார மண்டலத்தின் 50 சதவீதம் நிலங்கள் பொழுது போக்கு பூங்காக்கள், ஆடம்பர வணிக வளாகம், கேளிக்கை விடுதிகள், மற்றும் பிற ஆடம்பர வசதிகள் என அனைத்தும் இதில் அடங்கும்.

**சிறப்பு பொருளாதார மண்டலமா ? ரியல் எஸ்டேட் மண்டலமா ?**

சிறப்பு பொருளாதார மண்டலங்களின் 75 சதவீதம் (1000 ஹெக்டேர் மேல்) நிலத்தை தொழிற்சாலை சாராத பணிகளுக்கு பயன்படுத்தலாம் என்று சிறப்பு பொருளாதார மண்டல சட்டம் பிரிவு 5(2)ல் உள்ளது. சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இந்த பெரிய விரிசல் மாபெரும் விவசாய நிலங்களை தனியார் நிறுவனங்கள் வளைத்து போட்டு ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்கின்றனர். சிறப்பு பொருளாதார மண்டலம் ஏன் அதிக நிலம் வாங்குகிறார்கள் என்பதை இதில் இருந்தே தெரிந்து கொள்ளலாம். இம்மண்டலங்களில் உற்பத்தியின் மூலம் லாபம் கிடைக்கவில்லை என்றால், அந்நிலத்தை விற்று ஈடு செய்து கொள்ளும் வாய்ப்பும் உள்ளது. தற்போது ரிலையன்ஸ் நிறுவனம் மட்டும் 100,000 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியுள்ளது. மேலும், மத்திய அரசு நில விற்பனையில் பன்னாட்டு நேரடி முதலீட்டையும் ஜனவரி 2007 முதல் அனுமதித்துள்ளது. இந்தத் திட்டம் பன்னாட்டு நிறுவன முதலீட்டிற்கு மிகப் பெரிய அளவில் கதவை திறந்து விடுகிறது. நிலச் சீர்திருத்தத்தின் அடிப்படையான உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கொள்கையிலிருந்து விலகி, தற்பொழுது அரசாங்கமானது நில உரிமை மற்றும் நிலப் பயன்பாட்டை ரத்து செய்து பெரிய தொழில்கள் செய்வதற்கு உதவுகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு சட்டப்பூர்வமான நில உச்சவரம்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**சிறப்பு பொருளாதார மண்டலம் சட்ட மீறல்கள்**

சிறப்பு பொருளாதார மண்டல சட்டம் 2005 மூலமாக நடைபெற்ற முக்கிய விதி மீறல்கள்

- இது இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையே மீறுகிறது (பார்க்க பிரிவு 49 மற்றும் 51)
- அரசியல் சட்டத்தின் பாகம் III வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீற வழிவகுக்கிறது.
- தொழிலாளர் நல சட்டங்களை மட்டுபடுத்துவதோடு, அமுல் செய்ய முடியாமல் போகிறது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டங்கள் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்கு அமுலாகிறது.
- உள்ளாட்சி அரசின் பஞ்சாயத்து ராஜ்சட்டத்தை மீறுகிறது.
- பழங்குடி மக்களின் நிலங்கள் மீதான உரிமையை மீறுகிறது.
- சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையினை மீறுகிறது.

**நன்றி –"செமினார்" இதழ்**

# பிற மாநில ஊராட்சிகள் – ஒரு அனுபவம்

விமல் ஸ்ரீசாத் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாபுல்கான்ஸ் ஊராட்சி வரலாற்றிலேயே ஒரு பெண் அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண் ஊராட்சி மன்றத் தலைவராக வருவது இதுதான் முதல் தடவை. இதனால் ஆதிக்க சாதியினர் மற்றும் பிற ஆண்களுக்கு கோபம் வந்தது ஆச்சரியம் இல்லை.

தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் குவிந்து கிடந்த புகார்களாலும், விண்ணப்பங்களாலும் மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளானார். விமல் இவ்வளவு விண்ணப்பங்கள் ஏன் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கின்றன? மக்களை பாதிக்கும் உண்மையான பிரச்சனைகள் தான் என்ன? இவற்றையெல்லாம் ஆய்வு செய்யத் தொடங்கினார். கிராம முன்னேற்றத்திற்காக வேலை செய்ய ஆரம்பித்தார். பிறகு அவர், கடந்த 50 வருடங்களில் கிராம சபை என்பது காகிதத்தில் தான் உள்ளதே தவிர நடைமுறையில் இல்லவே இல்லை என்பதை கண்டறிந்தார். கிராம மக்களுக்கு கிராம சபை என்றால் என்ன, எப்பொழுதெல்லாம் கிராம சபை கூட்டப்படவேண்டும்? என்பதே தெரியவில்லை.

விமல் ஸ்ரீசாத், கிராம சபைக் கூட்டங்களை அடிக்கடி நடத்த ஆரம்பித்தார். கிராம மக்களுக்கு கிராம சபை பற்றிய விழிப்புணர்வை கொண்டு செல்ல விமல், ''தாவந்தி'' என்னும் பொது அழைப்பு முறையைக் கையாண்டார். ஊராட்சியில் உள்ள பிரச்சனைகளை பேச, அவற்றிற்கான தீர்வுகள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை பற்றி விவாதிக்க கிராம ஊராட்சி மற்றும் கிராம மக்களுக்கான ஒரு மேடையாக கிராம சபை இருக்கும் என்று விமல் நம்பினார். அரசின் நலத்திட்டங்களை பற்றிய தகவல்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல ஆரம்பித்தார். மக்களுக்கு இத்தகைய தகவல்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்ததால், விமல் ஸ்ரீசாத்திற்கு மரியாதை அளிக்கத் தொடங்கினர். மேலும் அவரது வேலைகளில் உதவிகள் செய்தனர். இதன் மூலம் கிராம நிர்வாகத்தில் கிராம மக்கள் பெருமளவில் பங்கேற்பதை விமல் கண்டார்.

அந்த கிராமத்தில் உள்ள அரசியல்வாதிகள் இந்த செயலை விரும்பவில்லை. ஒரு தலித் பெண் தலைமை தாங்குகிறார், முன்னேறிச் செல்கிறார் என்பதை அவர்களால் சகித்துக் கொள்ளமுடியவில்லை. அதிலிருந்து ''சதவிகித (ஊழல்) அரசாங்கம்'' ஆரம்பித்து விட்டது. வார்டு உறுப்பினர்கள் கிராம ஊராட்சியில் உள்ள விமலின் எதிர்தரப்பினரோடு கைகோர்த்துக் கொண்டு ஊராட்சி செய்யும் எல்லா வேலைகளிலிலும் கமிஷன் கேட்கத் தொடங்கினர். இந்தச் செயலை விமல் கடுமையாக எதிர்த்தார். அதன் விளைவாக அவருக்கு எதிராக ''நம்பிக்கையில்லாத் தீர்மானம்'' கொண்டுவரப்பட்டது. ஆனால் விமல் செய்த பல நல்ல வேலைகளினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடைந்தது. கிராம வளர்ச்சிக்காக அவர் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தியுள்ளார். கிராமத்தின் முக்கிய பிரச்சனை தண்ணீர் பற்றாக்குறை இந்தப் பிரச்சனையை கிராமத்தில் பல கைப்பிடிக் குழாய்கள் அமைப்பதின் மூலம் விமல் சரிசெய்தார். தலித் காலனி மக்களுக்கு என ஒரு தனியான தண்ணீர் இணைப்பை விமல் அனுமதித்தார். தெரு விளக்குகள் அமைக்கப்பட்டன. பொதுக் கழிப்பறையும் கழிவு நீர்க் கால்வாய் திட்டமும் அமைக்கப்பட்டன. நிலம் இல்லாத ஏழை கிராம மக்களுக்கு வீடு கட்ட நிலம் வழங்கப்பட்டது.

**– நன்றி "கிராஸ்ங் த லிமிட்ஸ்"**

# புதிய கட்டுப்பாடுகளால் கிராமம் சீரமைப்பு ஒருவர் குடித்தாலும் குடும்பத்துக்கே அபராதம் பஞ்சாயத்து தலைவி சாதனை – சட்டீஸ்கர்

ஒருவர் மது குடித்தாலும், அந்தக் குடும்பத்துக்கே அபராதம். குழந்தையை பள்ளிக்கு அனுப்பவில்லை என்றாலும் குடும்பத்துக்கே அபராதம். இப்படி ஒருவர் செய்யும் தவறுக்கு அந்த குடும்பத்துக்கே தண்டனை வழங்கப்படும் விதிகளை கடைப்பிடிப்பதால், அந்த கிராமம் இப்போது, வளர்ச்சிப்பாதையில் பீடுநடை போடத் தொடங்கியுள்ளது.

எல்லா குழந்தைகளும் பள்ளிக்கும் செல்வதையும், கிராமத்தில் ஒருவர் கூட மது குடிக்காமல் இருப்பதையும் கடுமையான விதிகள் மூலம் ஒரு கிராமம் சாதித்துள்ளது.

நாட்டில் நக்சலைட்டுகள் நடவடிக்கை அதிகம் உள்ள மாநிலங்களில் சட்டீஸ்கரும் ஒன்று. இந்த மாநிலத்தில் மிகவும் பின்தங்கிய கிராமம் திக்ரோலங்கம். மொத்தம் 250 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த கிராமத்தில் பள்ளிக்கு குழந்தைகளை அனுப்புவது என்பது பெரிய விஷயம். அதிலும், இரவானால் குடிக்காத ஆண்களை விரல் விட்டு எண்ணிவிடலாம் என்கிற நிலை.

இப்படிப்பட்ட கிராமத்தில் பஞ்சாயத்து தலைவராக பூலா காஷ்யப் என்ற பெண் வெற்றி பெற்றார். கிராமத்தின் நிலையை மாற்ற முடிவு செய்தார். கிராமத்திலிருந்த பெரியவர்களை அழைத்துப் பேசினார்.

'கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி, குழந்தைகள் எல்லாரும் பள்ளிக்கு அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தினார். அதேபோல், மது, போதை மருந்துகளின் தீமையை விளக்கிய பூலா காஷ்யப், யாரும் மது குடிக்க கூடாது, போதை மருந்து பயன்படுத்தக் கூடாது என்று கேட்டு கொண்டார். இதை கிராம பெரியவர்களும் ஏற்று கொண்டனர்.

மேலும், பள்ளிக்கு குழந்தையை அனுப்பாவிட்டால், அந்த குடும்பத்துக்கே அபராதம் விதிப்பது, யாராவது ஒருவர் போதை மருந்து பயன்படுத்தினாலோ, மது குடித்தாலோ அந்த குடும்பத்துக்கே அபராதம் விதிப்பது என்று பஞ்சாயத்து கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இதை உடனடியாக அமல்படுத்தினார் பூலா காஷ்யப். இந்த விதிகளை மீறும் குடும்பத்துக்கு 10 கூடை நெல் அபராதமாக விதித்தார். பூலா காஷ்யப்பின் இந்த நடவடிக்கைக்கு கிராமத்தில் உள்ள சுய உதவி குழுக்களும் உதவி செய்தன. இதனால், இப்போது கிராமத்தில் பள்ளிக்கு செல்லாத குழந்தைகள் இல்லை. ஒருவர் கூட மது குடிப்பது இல்லை. போதை மருந்து பழக்கம் யாரிடமும் இல்லை.

விளைவு ? வளர்ச்சிப் பாதையில் கிராமம் செல்லத் தொடங்கியுள்ளது. இதுபற்றி பஞ்சாயத்து தலைவி பூலா காஷ்யப் கூறுகையில், 'மனிதர்கள் சரியாக இருந்தால், நாடு முன்னேறும் என்பது உண்மையாகிவிட்டது. கிராமத்தில் இப்போது தீய பழக்கங்கள் இல்லை. அதனால், வளர்ச்சிப் பாதையில் கிராமம் செல்கிறது. இன்னும் 3 ஆண்டுகளில் அந்த கிராமம், நகரத்துடன் போட்டி போடும் அளவுக்கு முன்னேற்றம் அடையும் என்பது நிச்சயம் என்றார்.

# தேவை ஒரு மாற்று அரசியல்!

– வ. கீதா

உங்களுடன் உரையாடுவதில் மகிழ்ச்சியடைகிறேன், காரணம் பொது வாழ்வில் பெண்கள் பங்கேற்பது நம் நூற்றாண்டில் தான் அதிகரித்துள்ளது, இது தொடர வேண்டும். வீட்டுப்பிரச்சனை, குடும்பப் பிரச்சனை, பணி இடப் பிரச்சனைகள் இவை எல்லாம் மீறி போராடித்தான் நாம் பொது வாழ்வில் தொடர்ந்து பங்கேற்று வருகிறோம். மூன்று விஷயங்களுடன் நான் தொடங்கலாம் என்று நினைக்கிறேன். 1997 ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகள் நிறைவுற்றது. இந்த 50 ஆண்டுகளில் பெண்கள் வாழ்கைத்தரம் குறித்து பலரும் பேசி வந்தனர். நாங்கள் சிறு குழுவாக சேர்ந்து, அரசியலில் பெண்கள் கடந்த 50 ஆண்டுகளில் என்னவெல்லாம் செய்துள்ளார்கள் என்பது குறித்து கருத்தரங்கம் நடத்தினோம். 1994ல் தான் பஞ்சாயத்து சட்டம் திருத்தப்பட்டது, பெண்கள் எல்லாம் வெற்றி பெற்று வந்தனர். அவர்களும் இந்த மூன்று நாள் கருத்தரங்கத்தில் பங்கேற்றனர். இதில் பல வித்தியாசமான கருத்துக்களை எல்லாம் கேட்டோம்.

இதில் தேசிய இயக்கத்தில் இருந்த பெண்களும், திரவிடர் கழகம், கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்தவர்கள் மற்றும் தொழிற்சங்கங்களை சார்ந்த பெண்களும் தாங்கள் பொது வாழ்க்கைக்கு வருவதால் கற்றுக் கொண்டது என்ன, சந்தித்த சங்கடங்கள் என்ன, இதனால் அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் என்ன என்பது குறித்துப்பேசினர். அதில் அனைவராலும் முன்வைக்கப்பட்ட கருத்தாக ஒன்று இருந்தது. அவர் எந்த கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், எவ்வளவு காலம் அனுபவம் வாய்ந்தவராக இருந்தாலும் அவர்கள் சொன்னது என்னவென்றால் ‘‘நாம் பொது வாழ்க்கைக்கு வரும்போதே பல தடைகளை தாண்டித் தான் வருகிறோம், பல நேரங்களில் நம் கருத்தை முன்வைக்க முடிவதில்லை அதற்கு பயம் என்று அர்த்தம் இல்லை, சூழ்நிலை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. மிகுந்த அனுபவம் வாய்ந்த பெண்கள் கூட சொல்வது என்னவென்றால், கட்சிக்கூட்டங்களில் கூட எங்களுக்கு கடைசியில் தான் பேச வாய்ப்பு அளிக்கப்படுகிறது, 10 நிமிடமோ, 15 நிமிடமோதான் நேரம் தரப்படுகிறது. அதிலும் நாம் பெண்கள் பிரச்சனை குறித்துதான் பேச வேண்டும் என்று எதிர்பார்கிறாாகள். நாம் அதற்குத் தான் என்று எங்களுக்குள்ளே உருவாக்குவதாக சொன்னார்கள். இது வித்தியாசமாக இருந்தது. இரண்டாவதாக, வெளித்தோற்றத்திற்கு வேண்டுமானால் நாங்கள் இவை அனைத்தையும் ஏற்றுக்கொண்டு தலை அசைப்பதைப் போலத் தெரியும். ஆனால் நாங்கள் எப்படி எங்கள் குடும்பத்தில் நேரடியாக எதிர்க்காமல் மறைமுகமாக எதிர்ப்பை வெளிப்படுத்துகிறோமோ, அதே போல் பொது வாழ்க்கையிலும் சில விஷயங்களை சில நேரங்களில் செய்ய முடிகிறது’’ என்ற கருத்தையும் முன்வைத்தனர்.

இந்த இரண்டு கருத்தையும் நான் முன்வைக்கக் காரணம், பொது வாழ்விலும், குறிப்பாக உள்ளாட்சி அமைப்புகளிலும், பெண்கள் ஒப்புக்காகத்தான் செயல்படுகிறார்கள். பெரும்பாலும் அவர்களின் குடும்ப ஆண்கள் தான் செயல்படுகிறார்கள் என்ற கருத்து பரவலாக உள்ளது. குறிப்பாக தலித் பெண் தலைவராக இருந்தால் அவர் தைரியமாக இருந்தாலும், ஊர் மக்கள் அவரை மதிப்பதில்லை. நாம் பல இடங்களில் சங்கடங்களை அனுபவிக்கிறோம். நாம் நினைக்கும் பல விஷயங்களை நம்மால் செய்ய முடியவில்லை. அதே நேரத்தில், எங்கே நம்மால் நம் கருத்தைப் பதிய வைக்கமுடியுமோ, சுயமாக செயல்பட முடியுமோ, அங்கு செய்து கொண்டுதான் வருகிறோம். எந்த சூழலில் நம்மால் சுதந்திரமாக செயல்பட முடியும், எங்கே முடியவில்லை, எங்க நம்மால் எதிர்த்தும் போராட முடிகிறது என்பதை நாம் தரம் பிரித்துப் பார்க்க வேண்டிய தேவையும் இருக்கிறது.

நம்முடைய இந்திய சமூகத்தில் ஓட்டு மொத்தமாக பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பது பொது உண்மையாக இருந்தாலும், அதனூடாக சென்று நம் அனுபவங்களை நாம் அறிய வேண்டிய கட்டாயம் உள்ளது. அது என்னவென்றால், 1996 முதல் 2006 வரையிலான பத்து வருட அனுபவம்



(24.10.2007 அன்று நடைபெற்ற பெண் ஊராட்சி மன்றதலைவர்களுக்கான மனித உரிமை மற்றும் பாலினநீதி குறித்த பயிற்சிக் கூட்டத்தில் திருமிகு. வ.கீதா பகிர்ந்து கொண்டது)

என்பது நமக்கு உள்ளது. பெண் ஊராட்சி தலைவர்களின் செயல்பாட்டின் மூலமாகவே நம்மால் எது முடியும், எது முடியாது என்பது நமக்கு தெரியும். பல நேரங்களில் உங்களால் இதுதான் முடியும் என்று கட்டம்கட்டி கொடுத்து விடுகிறார்கள், அதை நாமும் சில நேரங்களில் ஏற்றுக் கொள்கிறோம், எனவே இதை எல்லாம் நம் மனதில் வைத்து செயல்படவேண்டும்.

பொது வாழ்க்கையில் பெண்கள் செயலுக்கு வரும் போது, இரண்டு விதமான பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியுள்ளது. ஊராட்சி பொறுப்பில் இருந்தாலும் சரி, மற்ற பொதுப்பொறுப்பில் இருந்தாலும் சரி, முதலில் நம் குடும்ப சூழலை சமாளித்து விட்டுத்தான் வரவேண்டியுள்ளது. இந்தக் கருத்தை அனைத்துப் பெண்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். திருமணம் ஆனாலும் சரி ஆகாவிட்டாலும் சரி, பெண்களுக்கு குடும்பம் தான் அடிப்படைக்கடமை என்ற பொதுக் கருத்து உள்ளது. அரசியல், ஊடகம், சினிமா என அனைத்தும் இதையே உணர்த்துகிறது. உங்கள் குடும்பத்தை கவனித்துவிட்டு பிறகு என்னவேண்டுமானாலும் செய் என்று தான் அரசியல் வாதிகளும் கூறுகின்றனர். குடும்பத்தில் வரும் பிரச்சனைகளை சமாளிப்பது என்பது, மற்ற விஷயங்கள் போல அல்ல. நம்மிடம் ஆண் கவுன்சிலர்கள் யாராவது தகராறு செய்தாலோ, அதிகாரிகள் ஒத்துழைப்பு தரவிட்டாலோ, அல்லது சாதியின் காரணமாக நாம் ஒடுக்கப்பட்டாலோ, நாம் அதனை சுட்டிகாட்டிப்பேச முடியும். ஆனால் குடும்பத்தை சமாளிப்பது அவ்வளவு எளிமையான காரியம் அல்ல.

பொதுவாக குடும்பத்தில் உரிமை குறித்து எப்போது பேசப்படுகிறது என்றால் உரிமைகள் அனைத்தும் இல்லாமல் போகும் போதுதான். பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் எந்த சமூகத்தை சேர்ந்தவராக இருந்தாலும் உரிமை என்பதை நாம் பல நேரங்களில் முழுமையாக சிந்திக்காமல் இருப்பதற்கு காரணம் உறவுகள் தான். நாம் உரிமைகளை யாரிடம் கேட்கிறோம், நம் தந்தையிடம், கணவரிடம், சகோதரர்களிடம் மற்றும் மகன்களிடம். இவர்கள் தான் நாம் தினம்தோறும் சந்திக்கும் நபர்கள். இவர்களிடம் நம் உரிமைகளை நிலை நிறுத்துவது என்பது சாதாரண காரியம் கிடையாது. நீங்கள் ஒரு தலித்தாக இருந்து கொடுமைப்படுத்தப்பட்டால், வன்கொடுமை தடுப்பு சட்டம் 1989ன் கீழ் வழக்கு பதிவு செய்யலாம். குடும்பத்திற்குள் பிரச்சனைகள் வருகிறது என்றால், அது குறிப்பிட்ட வரையறைக்குள் இருந்தால் மட்டுமே சட்டம் அதனை உரிமை மீறலாக அங்கீகரிக்கும். அன்றாடம் உங்களைப்பற்றியும் உங்கள் வேலை குறித்தும் மனவருத்தம் ஏற்படும் வகையில் பேசுவது போன்றவற்றை எந்த சட்டத்தின் கீழும் பதிவு செய்ய இயலாது. ஏனென்றால் இது எல்லாம் உறவை மையமாக வைத்து வெளியிடப்படும் கருத்து நான் உன் கணவன் உன்னப்பற்றி பேச எல்லா உரிமையும் எனக்கு உண்டு என்பார்கள்.

குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தில் இது போன்ற பிரச்சனைகளுக்கும் புகார் தெரிவிக்கலாம். ஆனால் நாம் தொடர்ந்து வாழவேண்டிய சூழலில் அவ்வாறு செய்யாமல், எல்லை கடந்த பிறகுதான் யோசிக்கிறோம் உரிமை என்பது உறவோடு சம்மந்தபட்டு வருவதால் பல நேரங்களில் நமக்குள் தடுமாற்றம் ஏற்படுகிறது. நம் உரிமையினை பெற வேண்டுமானால் அதற்கு வழங்கப்பட வேண்டடிய விலை என்ன? நாம் இப்படி தான் செய்வோம் என்று திடமாக நின்றுவிட்டால் வீட்டில் என்னாகும்? கடுமையான பிரச்சனை வரும். நம்மைச் சுலபமாக கட்டிப் போடும் விஷயம் அன்பு, பாசம் பெண் தன் உரிமையைக் கேட்டால் அங்கு அன்பு மறுக்கப்படுவது தான் தண்டனை. நம் உரிமைக்காக நம்மை சுற்றி இருப்பவர்களின் அன்பை இழந்து எப்படி வாழ்வேன் என்பது கேள்வியாக உள்ளது. இவற்றை எல்லாம் மீறி தனிமையாக வாழ்பவரை மாண்புமிக்கதாக நமக்கு அடையாளம் காட்டப்படவில்லை. தோழிகளோடு வாழும் வாழ்க்கையும் சரியானதாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

பெண்களின் வாழ்க்கை என்பது குறிப்பிட்ட உறவுகளினுடே தான் பயணப்படுகிறது. இப்படி வாழ்வதுதான் வாழ்க்கை என்று பொருள்படுத்தப்படுகிறது. எனவே பொது வாழ்க்கைக்கு வரும்போதே நாம் அனேக சிக்கல்களோடு தான் வருகிறோம். நம் உரிமைகளைப் பெற்றிட நாம் சிந்திக்க வேண்டும். சட்டம் அதற்கு ஒரு வகையில் வழிவகுத்தாலும்,

நாம் நமக்கான அடையாளம் குறித்து யோசிக்க வேண்டும். நாம் வீட்டுக்குள்ளேயே இருந்தால் போதுமா என்று யோசிக்க வேண்டும். நமக்கான அடையாளத்தை நாம் தான் முடிவு செய்ய வேண்டும். பொதுவாக சட்டங்கள் நமக்கு உதவலாம், இயக்கங்கள் நமக்கு பலமாக இருக்கலாம் நிறைய பேர் நமக்கு தகவல், விளக்கங்கள் தரலாம், ஆனால் நாம் ஒவ்வொரு வரும் நம் வாழ்க்கை குறித்து யோசிக்க வேண்டும், இது போதுமா ? நாம் எவ்வாறு வாழ வேண்டும் ? அதற்கு என்னென்ன செய்ய வேண்டும் ? என்பது குறித்து யோசிக்க வேண்டும். இல்லை என்றால் நாம் ஒடுக்குமுறைக்குப் பழகிப் போகிறோம். பொது வாழ்க்கையில், பெண்ணை எப்படி பார்க்கிறோம் ? ஊராட்சி தலைவராகவோ, பிற பொறுப்புக்களிலோ பெண் வந்தால், என்ன சொல்வார்கள் என்றால், பெண்கள் என்றால் தாயுள்ளத்துடன் பணி செய்வாள் என்கிறார்கள். இந்தத் தாய்மை என்று விட்டுக் கொடுப்பதையும், அடங்கிப் போவதையும் குறிப்பிடுகின்றனர்.

பெண்கள் பொது வாழ்விற்கு வந்தால், அவள் குடும்பத்தை சிறப்பாக வழி நடத்தினாள், அதனால் இப்பொறுப்பையும் சிறப்பாகச் செய்வாள் என்கின்றனர். நம் ஜனாதிபதி பிரதீபாபாட்டில் பொறுப்பேற்ற போதும் இப்படி தான் பேசினார்கள். ஆனால் மனமோகன் சிங் குறித்தோ, தமிழக முதல்வர் குறித்தோ ஏன் அவர்கள் குடும்பத்தை பராமரிப்பது குறித்துப் பேசுவது இல்லை ? இவற்றை உள்வாங்கிக்கொண்டு வருகின்ற நாமும் அதை ஏற்றுக் கொள்கிறோம் என்பதே உண்மை. எனவே தாய்மை, மனைவிக்கு உரிய கலாச்சாரம் ஆகியவை பொது வாழ்க்கைக்கு போதுமானதா என்பது குறித்து கேள்வி கேட்க வேண்டும்.

நாம் எப்படி இருக்க வேண்டும் என்றால் முதலில் சிறந்த குடிமகளாக இருக்க வேண்டும். இரண்டாவது நமக்கு இருக்கும் அதிகாரத்தை முறையாக பயன்படுத்த வேண்டும். முன்பு அதிகாரம் பெற்றவர்கள் ஊழல்வாதிகளாக, லஞ்சம் வாங்குபவர்களாக, இருக்கிறார்கள், இவற்றை மீறி அதிகாரத்தை நேர்மையாக பயன்படுத்துபவர்களாக நாம் இருக்க வேண்டும். நம்மை போல உரிமை பெற விருப்பத்துடன் இருக்கும் ஆயிரக் கணக்கான பெண்களின் பிரதிநிதிகளாய் நீங்கள் பொது வாழ்விற்கு வந்துள்ளீர்கள். நம்மை போல் செயல்பட வாய்ப்பற்று இருக்கும் பல பெண்களின் வாழ்க்கை மேம்பட வேண்டும் என்றால் நமக்கான பொது வாழ்க்கையின் அடையாளத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளவேண்டும். இன்றைய சூழல் என்பது நம்மை சிந்திக்கவிடாமல், அடக்கி வைக்கப் பார்க்கிறது. 90களில் பொதுவாழ்வில் நாம் எண்ணிக்கையில் குறைவு, ஆனால் நம் கருத்துபரவலாக வெளிப்பட்டது. இன்று பொது வாழ்வில் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, ஆனால் நமது கருத்து வெளிப்படவில்லை.

நாம் அடையாளப்படுத்த வேண்டிய அரசியல் என்பது சமத்துவம் மிக்க, நீதியான, நேர்மையான, ஊழலற்ற, பாலின சமத்துவம் கொண்ட, சாதிய பாகுபாடற்ற ஒரு அரசியலை நாம் கொண்டு செல்ல வேண்டும். பணக்காரர்களுக்கும், ஆதிக்க சமூகத்தினருக்கும் சாதகமான அரசியல் நமக்குத் தேவை இல்லை. உலகில் பல நாடுகளில் பெண்கள் இதை சாதித்துள்ளார்கள். போர் நடந்த பகுதிகளில் போரில் ஈடுபட்டுள்ள இரண்டு பக்கப் பெண்களும் ஒன்று சேர்ந்து அமைதியைக் கொண்டு வந்துள்ளனர். போர்ச் சூழலில் ஏன் நம்மால் செயல்பட முடியாது ? அப்படி செயல்படுவதற்கு பெண்ணிய சிந்தனை வேண்டும்.

பெண்ணிய சிந்தனை என்றால் என்ன ? ஆண்களை எதிர்ப்பது பெண்ணிய சிந்தனை அல்ல, இந்த சமூதாயத்தில் ஏன் ஆண்கள் அதிகாரம் உள்ளது ? ஒரு சில ஜாதிகளுக்கே ஏன் அதிகாரம் உள்ளது ? ஏன் பணக்காரங்கள் கை ஓங்கியுள்ளது ? என்று கேள்வி எழுப்பும் போது, நமக்கு சில பதில் கிடைக்கிறது. அந்த பதில் என்னவென்றால் எந்தச் சாதியானாலும் மதமானாலும், வர்க்கமானாலும் அடி மட்டத்தில் இருப்பது நாம் தான். இதை நாம் மாற்ற வேண்டுமென்றால் பெண்ணியம் முக்கியமானாது. கம்யூனிசம், தேசியம் போல பெண்களின் பார்வையில் இச்சமூகத்தை பார்த்தால் தெரியும். இச்சமூகத்தின் அவலம் தெரியும். இவற்றை மீறி குரல் கொடுத்து நம் உரிமைகளைப் பெற வேண்டும். நாம் சந்தோஷமாக வாழலாம், சுதந்திரமாக வாழலாம்

என்று சொல்லிக்கொடுப்பது தான் பெண்ணியம். பெண்கள் பொதுவாழ்விற்கு வந்தவுடன், அவர்களுக்கென்று தனி விஷயங்களை ஒதுக்கி விடுகிறது. அரசு, பெண்களுக்கு என்று சமூக நலத்துறை, குடும்ப நலத்துறை தான் ஒதுக்குகிறது. நாம் ஏன் நிதி அமைச்சராக இருக்க கூடாது? ஏன் உள்துறை அமைச்சராக இருக்கக் கூடாது? நமக்கு அனைத்து துறைகளிலும் அதிகாரம் தேவை. அதிகாரத்தைப் பெற அரசியல் கல்வியும், கல்வியும் மிக முக்கியமானது. இன்று பெண் கல்வி பெறாமல் போவதற்கு காரணம் என்னவென்று பார்க்க வேண்டும். அரசு கல்விக்கு அதிக நிதி ஒதுக்காததும், அரசின் கல்விக் கொள்கையும் முக்கிய காரணமாக உள்ளது. இவற்றை மாற்ற நாம் முன் வர வேண்டும்.

இன்று கிராமபுறங்களில் பெண்கள் எல்லோரும் செய்யும் வேலை என்ன? "சுய உதவி குழு". பெண்கள் எல்லாம் ஒன்றாக சேர்ந்து, பெண்களே தங்களை கடனாளியாக மாற்றுவதுதான் சுய உதவி குழுக்கள், இது பற்றி அறிவு பூர்வமாக யோசித்தோமா? அன்று மார்வாடியிடமும், கந்து வட்டி காரனிடமும் வாங்கிய கடனை இன்று நிதி நிறுவனத்திடமிருந்து பெறுகிறோம். அவ்வளவு தான் வித்தியாசம் இதுதான் பெண்களின் வேலை என்று அடையாளப்படுத்துகிறார்கள், இந்தப் பொருளாதாரம் குறித்து, அரசியலைக் குறித்து, கேள்வி எழுப்ப வேண்டும்.

அடித்தால் அழுவது அல்ல உரிமை, அடி விழுவதற்கு முன் கையை தடுப்பதுதான் உரிமை. நம்மை பாதிக்கும் விசயங்களை மற்ற செயல்களோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் அறிவு நமக்கு வேண்டும். பொதுவாழ்வில், குறிப்பாக உள்ளாட்சி துறைகளில் பணிபுரியும் பெண்கள், அரசிலோ, கட்சிகளிலோ, சுயமாக சிந்தித்து செயல்பட முடிகிறதா? ஏன் பெண் குரல் ஒரங்கட்டபடுகிறது? கை ஒங்கியவர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதனால் நிர்வாகம் மோசமான நிலையில் உள்ளது. சுகாதாரம் என்பது தனியாரிடம் சென்றுள்ளது. சுகாதாரம் தனியாரிடம் சென்றது யாரால் நகராட்சி மன்றத்தால், ஒரு பெண் மன்ற உறுப்பினராக இருந்தும் இதில் மாற்றம் கொண்டு வர முடியவில்லை

சுகாதாரம் என்பது பெண்கள் நேரடியாக பாதிப்படையும் பிரச்சனை. அரசு கவனிக்க வேண்டிய சுகாதாரத்தை ஏன் தனியாரிடம் வழங்க வேண்டும்? என்று கேள்வி எழுப்ப வேண்டும். நம்முடைய அரசியல் கல்வி என்பது பெண் சம்மந்தமாக மட்டும் இல்லாமல், நம்மை சுற்றியுள்ள சமூகத்தை தொடர்ப்பு படுத்துவதாக இருக்க வேண்டும். நாம் பொது அரசியலால் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயம் தற்போது உள்ளது. முதலாவதாக, கடந்த பத்து வருடமாக உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட்டுவரும் சூழலில், இன்று ஏதேச்சதிகாரமாக, மாநில அரசும், மத்திய அரசும் தொழிற் வளர்ச்சிக்காக நிலங்களை அரசுடைமையாக்குவோம் அல்லது தனியாரிடம் வழங்குவோம் என்கிறது. அரசு, சிறப்பு பொருளாதார மண்டலம் என்ற பெயரில் ஒவ்வொரு கிராமமும் அதன் நிலம், வளங்கள் போன்றவை கொள்ளை போகிறது.

இதனால் பாதிப்படைவது ஏழை மக்கள், இந்தியாவிலேயே மிக உற்சாகமாக நிலத்தை பிடுங்குவது நம் தமிழக அரசு தான். இது நம் பிரச்சனை, நாம் இதில் தலையிட வேண்டும். நாளை உங்கள் வீடு காணாமல் போகலாம், ஊர் சுடுகாடு, கிணறு, நீங்கள் படித்த பள்ளிக்கூடம் காணாமல் போகலாம். இதை பற்றி பெண்களிடம் நாம் பிரச்சாரம் செய்ய வேண்டியுள்ளது, என்னவென்றால், நாளை ஊரே ஒன்று சேர்ந்து போராட வேண்டுமென்றால், பெண்கள் இல்லாமல் வெற்றி பெற முடியாது. இது வாழ்வாதாரம் குறித்த பிரச்சனை, நம் பஞ்சாயத்தில் இதற்கு தடைபோட முடியுமா, ஊராட்சி வேண்டாம் என்று சொன்னால் இத்திட்டம் அமுலாகாதவாறு செய்ய வேண்டும்.

தற்போது சென்னை போன்ற நகரங்கள் நடு இரவு வரை செயல்படுகிறது. பெண்கள் வேலைகளுக்கு செல்கிறார்கள், இரவு பத்து மணிவரை கூட சாலைகளில் தனியே தைரியமாக செல்கிறார்கள். நகரத்தை சுற்றியுள்ள கிராமம், நகற்புறங்களில் இருந்தும் வேலைக்கு வருகிறார்கள். ஆனால் அதே நேரம் நம்மை சமூக மாற்றத்தை நோக்கி செல்லவிடாமல் மீண்டும் பிற்போக்கு தனத்தை நோக்கி வழி காட்டுவதும், பெண் என்றால் உடல் அழகாக இருக்க வேண்டும் என்ற பெண்ணை முடக்கிவைக்க நடைபெறும் முயற்சியையும் முறியடிக்க வேண்டும். இவற்றை மீறி மாற்று

# பெண் ஊராட்சித் தலைவருக்கு முட்டுக்கட்டை

பணிகளை முடக்கும் ஆணாதிக்கம்

சர்வதேச மகளிர் தினத்தன்று 'தீக்கதிர்' நாளிதழில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களின் அமைப்புகளில் பெண்களின் தலைமை, தடைகளைத் தாண்டிய சாதனையாளர் என்கிற தலைப்பில் செய்திக்கட்டுரை பிரசுரமானது. தன்னந்தனியாக ஆண்துணையின்றி சொந்த வாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் வெற்றிபெற்றவரான கீழ் குப்பம் ஊராட்சி மன்றத் தலைவர் கலைவாணியைப் பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குடும்பத்து ஆண்களில் தலையீடு மிதமிஞ்சிய வகையில் பெண்கள் பொறுப்பு வகிக்கும் உள்ளாட்சி அமைப்புகளில் இருப்பதையும், அதிகாரிகள் இத்தகைய நிகழ்வை கண்டுகொள்வதில்லை எனவும் அச்செய்தியில் பதிவாகியுள்ளது.

குறிப்பாக கீழ்குப்பம் ஊராட்சி மன்றத்தின் துணை தலைவரான புஷ்பாவுக்காக அவரது கணவர் முருகேசன் ஊராட்சி மன்ற காசோலைகளில் கையெழுத்து போடுவது குறித்த தகவல் இடம்பெற்றிருந்தது.

இச்செய்தி தீக்கதிரிலிருந்து நகல் எடுத்து ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒட்டப்பட்டிருந்தது. இந்தத் தலைவர் குறித்து 21.3.2008 தேதியிட்ட குமுதம் ரிப்போர்ட்டர் வார இதழில் இரண்டு பக்க செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இவை கிராமத்து ஆணாதிக்கத்தால் சகித்துக் கொள்ள முடியாதவையாக இப்போது மாறியுள்ளன.

கீழ்குப்பத்தில் தலித் மக்கள் குடியிருக்கும் பகுதியில் போதிய இடவசதி, இல்லாமல் கழிப்பறை சாலை சாக்கடை கால்வாய் இல்லாமல் இங்குள்ள மக்கள் அவதிப்பட்டு வருகிறார்கள். எனவே, தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கான இடம் ஒதுக்க வேண்டும் என கலைவாணி மனுகொடுத்துள்ளார். இது போல் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கேட்டு கல்வி அதிகாரிகளிடம் மனு கொடுத்துள்ளார். ஊராட்சி மன்றத் தீர்மானம் இருந்தால் நடவடிக்கை எடுக்க உதவியாக அப்போது இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன் படி தீர்மானங்களுடன் வெள்ளிக்கிழமை (ஏப்–4) ஊராட்சி மன்றத்தை கலைவாணி கூட்டியிருந்தார். ஆனால் மன்ற உறுப்பினர்கள் இத்தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் புறக்கணித்துள்ளனர்.

பத்திரிகைகளில் கலைவாணி குறித்த செய்திகள் வெளியானது முதல் பல்வேறு நெருக்கடிகள் கலைவாணிக்கு இருந்து வருகிறது.

இது குறித்து கலைவாணி கூறும்போது "நான் சொன்ன கருத்து எனது பஞ்சாயத்துக்கானது மட்டுமல்ல. பெண்களுக்கான இடஒதுக்கீடு அர்த்தமுள்ளதாக எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான். இதற்காக எனது பதவியே போனாலும் பரவாயில்லை இறுதிவரை போராடுவேன்" என்கிறார் உறுதியுடன்.

**தீக்கதிர், 07.04.2008**

# கேள்வி பதில்

**1. ஊராட்சி எழுத்தர் அவரது பணியை சரிவர செய்யவில்லை என்றால் அவரை பணி நீக்கம் செய்யும் முறை என்ன ?**

எழுத்தர் அவரது பணியை சரிவர செய்யவில்லை என்றால் அவரை பணி நீக்கம் செய்யும் அதிகாரம் பஞ்சாயத்து செயல் அலுவலர் என்ற முறையில் ஊராட்சித் தலைவருக்கு உண்டு. ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 106ன் படி செயல்படாத எழுத்தர் மீது குற்றச்சாட்டு அறிக்கை அனுப்பி அவரது விளக்கத்தை கேட்க வேண்டும். விளக்கம் பெற்ற பின்பு அல்லது விளக்கம் பெற கால தாமதம் செய்தால் எழுத்தரை நேரடியாக விசாரணைக்கு அழைத்து விசாரணை செய்ய வேண்டும். விசாரணையில் குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டால், அது பற்றி எழுத்தருக்கு அனுப்பி பிறகு குற்றச்சாட்டு நிரூபணமான அடிப்படையில் எழுத்தரை பணி நீக்கம் செய்து ஆணை பிறப்பிக்கலாம். ஊராட்சி மன்றத் தலைவர் செய்யும் எந்த ஒரு நடவடிக்கைகளையும் ஊராட்சி மன்றக் கூட்டத்தில் விவாதித்து தீர்மானம் இயற்றி பிறகு நடைமுறைப்படுத்தவேண்டும்.

**2. ஊராட்சி நிலங்கள் தொடர்பாக ஊராட்சித் தலைவர் தேவையான தகவல்களை பெறுவது எப்படி ?**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 225ம் படி கிராம நிர்வாக அதிகாரியிடம் (VAO) இருந்து, அந்த கிராம எல்லைக்குட்பட்ட நிலங்கள் சம்பந்தமாக தகவல்களை பெறுவதற்கு ஊராட்சியின் செயல் அலுவலருக்கு (தலைவருக்கு) அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக விதிகளும் உள்ளன. ஊராட்சி பகுதியில் உள்ள நிலம் பற்றிய எந்த தகவல் வேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிட்டு அதனை ஒரு கால வரையறைக்குள் தமக்குத் தர வேண்டும் என்று அதில் ஊராட்சியின் செயல் அலுவலர் (தலைவர்) குறிப்பிட வேண்டும். இந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் தகவலைத் தர கிராம நிர்வாக அதிகாரி கடமைப்பட்டவர். தவிர்க்க முடியாத காரணத்தால் உரிய காலத்திற்குள் தகவலைத் தர முடியாமல் போனால் செயல் அலுவலர் கால கெடுவை நீட்டித்துக் கொடுக்கலாம்.

**3. ஊராட்சி எல்லைக்குட்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தொழில் வரி எந்த அடிப்படையில் விதிக்க வேண்டும் ?**

மாத ஊதியம் பெறும் தனியார் நிறுவனங்களில் பணி புரிவோரின் 6 மாத வருமானம் ரூபாய் 21,000க்கு மேல் இருந்தால் அரசு குறிப்பிட்டுள்ள விகிதத்தில் கீழ்கண்டுள்ள படி தொழில் வரி விதிக்கலாம். இந்த வரியை அந்தந்த நிறுவனமே கணக்கிட்டு பிடித்தம் செய்து ஊராட்சிக்கு செலுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| ரூ. 30,000 வரை | – ரூ 60/– | ரூ. 60,000 வரை | – ரூ 300/– |
| ரூ. 45,000 வரை | – ரூ 150/– | ரூ. 75,000 வரை | – ரூ 450/– |
| ரூ. 75,000க்கு மேல் | – ரூ 600/– | | |

**இந்த இதழ் பற்றிய வாசகர் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன..**

# போல் பாலி: சிறப்பு தேர்தல் மண்டலம்

**பி. சாய்நாத்**

ஜாட்செர்லா சட்டமன்றத்தொகுதியில் ஒரே இடத்திற்கு 13 நபர்கள் சுயேச்சையாகப் போட்டியிட்டனர். அவர்கள் ஒருவருக்கு ஒருவர் எதிர்த்துப் போட்டியிடவில்லை; மாறாக அவர்கள் ஒருவர் ஒருவருக்காக போட்டியிடுகின்றனர். அவர்களது சின்னங்கள் விசில், எரிவாயு சிலிண்டர், வளையல், ஒரு கொத்து வாழைப்பழங்கள் இதே போன்று இன்னும் சில. அவர்கள் எதிர்எதிராக இருந்தாலும், ஒருவருக்கொருவர். ஒரு பொதுவான தேர்தல் அறிக்கையை வைத்திருக்கிறார்கள். பிரச்சாரம் கூட சேர்ந்தே செய்கிறார்கள். இந்த தலித், ஆதிவாசி மற்றும் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த விவசாயிகள் தெலுங்கானாவில் நான்கு லோக்சபை மற்றும் 17 சட்டமன்றத் தொகுதிக்கு நடைபெறும் தேர்தலில், அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் வேட்பாளர்களாக உள்ளனர்.

ஜாட்செர்லாவில் உள்ள இந்த அனைத்து 13 நபர்களும், மகஹ்புப் நகர் மாவட்டத்தின் போல் பாலி பார்மா சிறப்பு பொருளாதார மண்டலம் (SEZ) மற்றும் வேறு சில திட்டங்களுக்காக, தங்களது நிலத்தை இழந்தவர்கள். அவர்கள் இழப்பை பற்றிய செய்தியை அனைவருடைய கவனத்திற்கும் கொண்டுவரவே இவர்கள் போட்டியிடுகிறார்கள். சிலர், அவர்களுடைய சொந்த நிலத்திலேயே கட்டப்படும். அவர்கள் தலையெழுத்தையே பாதிக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலக் கட்டிடத்தில், கட்டுமானத் தொழிலாளர்களாக வேலை பார்க்கிறார்கள்.

“2003லிருந்து நிலம் பறி முதல் செய்யப்படுதல் நிகழ்ச்சி தொடங்கிய நாளிலிருந்து 41 மக்கள் இறந்துவிட்டனர்” என்று முரவத்சந்தி கோபத்துடன் கூறினார். இவர் குண்ட்லகடா தண்டா என்னும் ஊரில் உள்ள (ஆதிவாசி காலனி) லம்பாடா இனத்தைச் சேர்ந்தவர். “இறந்தவர்களில் மூன்று பேர் என்னுடைய மிகவும் நெருங்கிய உறவினர்கள். மக்கள் அவர்களுடைய வாழ்வாதாரமாகிய நிலத்தை இழந்துவிட்டதால், அவர்கள் வாழ வேண்டும் என்ற ஆசையையும் இழந்துவிட்டார்கள். என்னுடைய குடும்பம் 27 ஏக்கர் நிலத்தை இந்த திட்டத்துக்காக இழந்து விட்டது. அதனால் தான் நான் தேர்தலில் போட்டியிடுகிறேன்” என்று அவர் கூறினார்.

மூன்று மாதத்திற்கு முன்பு இறந்தவர்களுள் ஒருவரான பாலு என்பவரின் மகன்களான சீனு மற்றும் லஷ்னமணன் இருவரும், “அவர்களுடைய அனைத்து நிலத்தை இழந்தும், மூன்று மாதத்திற்கு முன்பு, அவருடைய இறுதிச் சடங்கை செய்வதற்காக எங்களிடம் இடம் எதுவும் இல்லை” என்று கூறினார்கள். “எனவே நாங்கள் 5000 ரூபாய்க்கு மிகக் குறைந்த சதுர அடியில் நிலம் வாங்கி, அங்கு அவருடைய பிணத்தை எரித்தோம்” என்றும் அவர்கள் கூறினார்கள். அவர்கள் அருகில் இருந்த ஒருவர், “பல ஏக்கர் நிலத்திற்கு சொந்தக்காரராக இருந்த ஒருவருக்கு, அவர் இறந்த பிறகு அவருடைய உடம்பை புதைப்பதற்கு இடம் இல்லை” என்று கூறினார்.

“இந்த நிலப்பறி முதலுக்குப் பிறகு, 25 பேர் இறந்து விட்டனர். அதை அரசாங்கம் அவர்கள் இயற்கையாகவே இறந்துவிட்டனர் என்று கூறிவிட்டது. ஆனால் அங்குள்ள ஆதிவாசிகள், அவர்கள் நிலப்பறிமுதல் செய்யப்பட்டதால் மிகவும் மனமுடைந்து வாழவழி தெரியாமல் இறந்து விட்டார்கள் என்று கூறுகிறார்கள்”, என்று அங்குள்ள ஈநாடு பத்திரிகை நிருபர் எம்.எல்.நரசிம்மா ரெட்டி அவர்கள் கூறினார். இந்த துன்பத்திற்குப் பிறகு இறந்தவர்களுக்கு என்று லம்படா மக்கள் போராடிய இறுதிச் சடங்கு நிறைவேற்ற மாட்டோம் என்று கூறிய பிறகு அரசாங்கம் அவர்களுக்கு 6 ஏக்கர் நிலம் வழங்கியது. அதில் 4 ஏக்கர் தண்டா மக்கள் வாழ்வதற்கும், 2 ஏக்கர் பிணங்களை புதைப்பதற்கும் கொடுத்தனர்.

“அவர்களே எங்களைக் கொன்று விட்டு, அவர்களே இரக்கத்துடன் எங்களுக்கு கல்லறையும் கொடுக்கிறார்கள்” என்று சண்டியின் பக்கத்து வீட்டுக்காரரான தார்மியா சிரித்துக் கொண்டே சோகத்தோடு கூறினார். “நாங்கள் போவதற்கு இந்த ஒரு இடம் தான்

உள்ளது. இந்த தண்டாவில் வாழும் 80 குடும்பங்களும் விவசாயத்தைத் தவிர வேறு வேலை கிடையாது'' என்றும் அவர் கூறினார்.

## 350 குடும்பங்கள் இடம்பெயர்க்கப்பட்டனர்:

சாண்டியும் மற்றும் பிற குழுவிலிருந்து 12 பேரும் சுயேட்சையாக போட்டியிடுகிறார்கள் ஏனென்றால் மற்ற முக்கிய அரசியல் கட்சிகள் அனைத்தும் SEZக்கு உறுதுணையாக இருக்கின்றன. 2003ல் தெலுங்கு தேசம் அரசாங்கம் ''பச்சைப் பூங்கா'' (Green Park) பற்றி தெரிவித்து அதற்காக 969 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தத் துவங்கியது. இதில் நிறைய நிலங்கள் தலித் மற்றும் லம்பாடா மக்களுடையது. இவற்றுள் சில அவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக முன்னொரு சமயம் அரசாங்கம் அவர்களுக்கு அளித்த நிலங்களாகும்.

முதலில் இந்த இடத்தில் ஒரு ''தோல் பூங்கா'' (Leather Park) வரப்போவதாகக் கூறினார்கள் என்று போலி பாலி வேட்பாளர் எட்டிலங்கய்யா (எரிவாயு சிலிண்டர் சின்னம்) கூறுகிறார். பிறகு அவர்களுக்கு ''பச்சை பூங்கா'' (Green Park) திட்டம் வந்தது. இப்பொழுது சிறப்பு பொருளாதார மண்டலத் (SEZ)திட்டம் முதலில் எங்கள் நிலத்தை பிடுங்கிவிட்டு பிறகு அவர்கள் திட்டம் தீட்டுகிறார்கள். 2005ல் புதிய காங்கிரஸ் அரங்சாங்கம் இந்த திட்டத்தை செயல்படுத்தியது. இந்த SEZ மற்றும் மற்ற திட்டங்களும் 350 குடும்பங்களை இடம்பெயர்த்து விட்டது.

அதிகார இயந்திரத்தின் படி, அரசாங்கப் பதிவேட்டுப்புத்தகத்தில் உள்ளபடி அனைத்தும் நடந்துவிட்டது. சிறப்புப் பொருளாதார மண்டலம் (SEZ) சட்டப் பூர்வமாக தெரிவிக்கப்பட்டது. நிலத்தை இழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது, யாரும் அவற்றில் இருந்து விடுபடவில்லை. இவை அனைத்தும் உண்மை என்கின்றனர் சிலர் ஆனால் ''அரசாங்க விலையின் படி பட்டா இல்லாத நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு வெறும் ரூ.18,000 ரூபாயும், பட்டா உள்ள நிலத்திற்கு ஒரு எக்கருக்கு ரூ.32,000திலிருந்து ரூ.50,000 வரை கொடுத்தார்கள். வாழ்க்கைக்கு மிகவும் தேவையான இந்த குறைந்த பணத்தைக் கூட நாங்கள் முழுவதுமாக பெறவில்லை''. இதே பகுதியில் தேசிய நெடுஞ்சாலை அருகில் உள்ள நிலத்தின் விலை ஒரு ஏக்கருக்கு ரூபாய் 20 லட்சம் ஆகும்.

நிலத்தை இழந்தவர்கள் அனைவரும் காசோலையை வாங்கிவிட்டனர் என்று அதிகாரிகள் கூறினர். அதற்கு சண்டி கூறுகையில் ''நிச்சயமாக வாங்கிவிட்டோம். எதனாலென்றால், நீங்கள் இப்பொழுது காசோலையை எடுக்காவிட்டால் பிறகு எப்பொழுதுமே கிடையாது. நீங்கள் ஜெயிலுக்கு போவீர்கள், எதுவுமே கிடைக்காது என்று எங்களிடம் கூறினார்கள். எங்களுடைய விருப்பத்தை நினைக்கவில்லை குறைந்த விலை ஒரு பக்கம் இருந்தாலும் எங்களுக்கு வேறு எந்த ஒரு நஷ்ட ஈடு எதுவும் வழங்கவில்லை. வீட்டிற்கான இடம் பற்றி பேசப்பட்டது, இன்னும் இடத்தை பார்க்கவில்லை. நிலத்தை இழந்த சிலருக்கு கட்டுமான தொழிலில் வேலை கொடுத்தனர். ஆனால் அவர்களில் பலர் இந்த வேலை செய்வதற்கான வயதை தாண்டி விட்டோம்'' என்று கூறினர்.

போல் பாலியில் உள்ள 13 வேட்பாளர்களில் 8 பேர் எங்களிடம் பேசினர். 8 வேட்பாளர்களும் ஒரே இடத்தில் அமர்ந்து ஒருவருக்கொருவர் சொல்லுவதை மற்றவர்கள் ஏற்றுக் கொண்டு பேசினார்கள். ஒவ்வொருவருமே அவர்களுடைய நிலத்தை இழந்தவர்கள். கஷ்டத்தின் காரணமாக அவர்களுடைய ஆடு, மாடுகளையும் இழந்துவிட்டனர். மொகிலியம்மா (சின்னம் – செங்கல்) குடும்பம் 8 ஏக்கர்கள் நிலதை இழந்து விட்டது. மேலும், 16 எருமை மற்றும் மாடுகளை வெறும் ரூ.20,000க்கு விற்றுவிட்டனர். இன்னும் பலர் இவ்வாறே செய்தனர் ''ஏனென்றால் இனிமேல் அவைகளுக்கு எங்களால் உணவளிக்க முடியாது'' என்று அவர் கூறுகிறார்.

ஐங்கிலியம்மா (சின்னம் – பேட்டரி டார்ச்) தன்னுடைய 7 ஏக்கர் நிலத்தை ரூ.1000 த்திற்கு விற்றுவிட்டார்.

இந்த லம்பாடா தண்டாவில், உள்ள மக்கள் நன்றாக வாழ்ந்த ஆதிவாதி குழுவினர் இப்பொழுது அவர்களுடைய அழிவை சந்திக்கின்றனர். ''அநேகமாக குடும்பங்களில் 50–60 எருமைமாடுகள் வளர்க்கப்படும். தற்பொழுது அவைகளை அடிமட்ட விலையில் விற்கின்றோம்'' என்று டார்மியா கூறினார். ''பறிமுதல் செய்யப்பட்ட எங்கள் நிலங்களில் போர் கிணறுகள் இருந்தன. அவை என்னாயிற்றோ ?'' என்று சண்டி கூறினார்.

''போல் பாலியில் திருமணம் என்ற ஒன்று முடக்கப்பட்டுவிட்டது. இத்தகைய பேரிடரை சந்தித்த எங்கள் குழுவிலிருந்து திருமணம் செய்ய யாருமே விரும்பவில்லை. எங்களிடம் நிலமும் இல்லை. சொத்தும் இல்லை'' என்கிறார் ஜங்கிலியம்மா.

**<u>பிச்சையெடுப்பதைவிட மோசமான நிலை :</u>**

இந்தச் சூழலில் பொருட்களின் விலை அதிகமாகிவிட்டது. இது இந்த சமூகத்தினரை மிகவும் பாதிக்கிறது. அவர்கள் இன்னும் அதிகமாக வறுமையில் தள்ளப்பட்டு விட்டனர். ஒரு சில வேட்பாளர்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கு உணவளித்து விட்டு, பசியோடு செல்கின்றனர். ''எங்களில் ஒரு சிலர் தங்களுடைய குழந்தைகளுக்கு உணவளிப்பதற்காக பிச்சைக் கூட எடுக்கின்றனர்'' என்று சத்தியாம்மா (சின்னம்– கப்போர்டு) கூறினார். ''எங்களுக்கு நடந்த அநீதியை சுட்டிக்காட்டவே நாங்கள் இந்த தேர்தலில் போட்டியிடுகிறோம்'' என்று லிங்கய்யா கூறினார்.

ஆனால் ஏன் 13 போர் ஒரே இடத்திற்கு போட்டியிட வேண்டும் ? பொதுவான ஒரு வேட்பாளர் போட்டியிடுவது தானே சரியாக இருக்கும் ?

அவர்கள் வெற்றி பெற முடியாது என்பது லிங்கய்யாவுக்கு நன்றாகவே தெரியும். ''முக்கிய கட்சிகளின் ஓட்டுக்களை பிரிப்பதே எங்களின் உத்தியாகும். நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் பிரிவைச் சார்ந்தவர்களின் வாக்குகளை பெற்றுவிடுவோம். அதனால் தான் இத்தனை பேர் போட்டியிடுகிறோம். இந்த ஒரு தொகுதிக்கு நாங்கள் 150 வாக்காளர்களை நிறுத்த விரும்பினோம். ஆனால் எங்களில் பலரால் வேட்பாளர் பாதுகாப்புத் தொகையான ரூ.5,000 த்தை செலுத்த முடியவில்லை'' என்கிறார் லிங்கய்யா.

இது தேர்தலில் வெற்றி பெறுவதற்கான எந்த நோக்கமும் இன்றி போராடுவதற்கான உத்தியாகும். ''ஊழலை ஒழிக்கப்போகிறோம், சமூகத்தை மாற்றப்போகிறோம் என்றெல்லாம் கூறிக்கொண்டு தேர்தலில் குதிக்கும் மேல்தட்டுக் கட்சிகளின் நடுத்தர வர்க்கத்தைவிட இது நேர்மையான வழி'' என்கிறார் ஐதராபாத்தைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் உமா மகேஸ்வரி.

''எங்கள் நிலத்தை நாங்கள் திரும்பப் பெறுவோம், எங்கள் வாழ்க்கையை திரும்பப் பெறுவோம், இதுதான் எங்களின் ஒரே கோரிக்கையாகும்'' என்ற போல் பாலி சிறப்புப் பொருளாதார மண்டல எதிர்ப்பாளர்கள் நோக்கம் எளிமையானது. அவர்களின் பொதுவான தேர்தல் அறிக்கையில் உள்ளது போல் எங்களுக்கு வீட்டு மனைகளும், ரூ 2க்கு ஒரு கிலோ அரிசியும் தருவது என்ற செயல் எங்கள் விவசாயிகளிடமிருந்து நிலங்களைப் பறித்து அவற்றை பெரிய தொழிற்சாலைகளுக்கு தருவதே ஆகும். எந்த வித வாக்குறதியும் அளிக்காததே இவர்களின் தேர்தல் அறிக்கையின் சிறப்பு அம்சமாகும். போல்பாலி விவசாயிகளுக்கு வாக்களிப்பது, அன்னை பூமியை அன்புடன் வணங்குவதற்கு இணையானது என்ன ?

**–ஆதாரம்,தி ஹிந்து 26.05.2008**

# தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் – தமிழ்நாடு ( தேசிய ஊரக வேலை உறுதி சட்டம், 2005 பிரிவு 4(1) ) அத்தியாயம் IV

**கூலி விகிதம்**

✐ மாநில அரசு அவ்வப்போது விவசாயத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கும் குறைந்த பட்ச கூலி விகிதப்படி தமிழ்நாடு ஊரக வேலை உறுதிதிட்ட கூலி விகிதம் இருக்கும்.

✐ இத்திட்டத்தில் ஆண், பெண் தொழிலாளர்கள் இருவருக்கும் சம கூலி அளிக்க வேண்டும். பாலின அடிப்படையில் இதில் எவ்வித பாகுபாடும் இருக்கக்கூடாது. சம கூலி சட்டம் 1976 (மத்திய சட்டம் 25 1976) இதற்கு பொருந்தும்.

✐ எந்த வேலை தளத்திலும் வேலை செய்யும் பெண்களுடன் உள்ள 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 5 அல்லது அதற்கு மேல் இருந்தால் அக்குழந்தைகளை கவனித்துக் கொள்ள அந்தப் பெண்களில் ஒருவரை நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்படுபவருக்கு விவசாயத் தொழிலாளர் குறைந்த பட்ச கூலி விகிதம் அளிக்க வேண்டும்.

✐ அரசினால் வரையறுக்கப்பட்ட வேலையினை செய்யும் அளவிற்கேற்ப கூலி இருக்கும்.

✐ முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட தேதியில், சமுதாயத்தின் பொதுவான நபர்கள் முன்னிலையில் கூலி மற்றும் வேலையில்லாக் கால நிவாரணம் 15 நாட்களுக்குள் பணமாக உரிய நபரிடம் நேரிடையாக பட்டுவாடா செய்யப்படும். பயனாளிகள் விரும்பினால் வங்கி / அஞ்சலகம் மூலம் பணப்பட்டுவாடா செய்யப்படும்.

✐ செயல்பாட்டு முகமைகள், குறைந்தபட்ச கூலிச்சட்டத்தின் கீழ் வேலை அட்டவணைக்கேற்ப செய்யப்பட்ட வேலைக்கான கூலியை இத்திட்டப்படி அளிக்காவிடில், மாவட்ட திட்ட அதிகாரி அந்த செயல்பாட்டு முகமைக்கு மேலும் நிதி அளிப்பதை நிறுத்துவதோடு, தவறு செய்யும் அதிகாரிகள் மீது குறைந்தபட்ச கூலி சட்டப்படி பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

✐ வேலையில்லாக்கால நிவாரணம் பட்டுவாடா

✐ வேலை கோரி மனு பெறப்பட்ட 15 நாட்களுக்குள் இத்திட்டப்படியான வேலையினை விண்ணப்பதாரருக்கு அளிக்கப்படாவிடில் அல்லது முன்கூட்டியே அளிக்கப்பட்ட மனுவில் குறிப்பிட்ட தேதியில் வேலை அளிக்கப்படாவிடில், இதில் எது கடைசியானதோ அதன்படி அவர் / அவள் வேலையில்லா கால நிவாரணத்திற்கு தகுதியானவர். வேலையில்லாக் கால நிவாரணம் அந்த குடும்பத்தின் உரிமைக்கேற்ப முதல் 30 நாட்களுக்கு கூலி விகிதத்தில் 4ல் 1 பங்குக்கும் நிதியாண்டின் மீதி நாட்களுக்கு கூலி விகிதத்தில் அரை பங்குக்கும் குறையாத அளவில் வழங்கப்பட வேண்டும்.

✐ வேலையில்லாக் கால நிவாரணம் அந்த நிதியாண்டிலும், அக்குடும்பத்திற்கு ஊராட்சி அளிக்க வேண்டிய பொறுப்பானது கீழ்க்காணும் நேர்வுகளில் நிறுத்தப்படும்.

கிராம ஊராட்சி அல்லது வட்டார வளர்ச்சி அதிகாரி விண்ணப்பதாரரை அவரோ அல்லது அவரது குடும்பத்தில் ஒருவரோ வேலைக்கு வரவேண்டுமென அறிவிக்கும் போது அல்லது.

வேலை கோரப்பட்ட நாட்கள் முடிவுக்கு வரும் போது மற்றும் விண்ணப்பதாரரின் குடும்பத்திலிருந்து எந்த உறுப்பினரும்

வேலைக்கு வராதபோது

குறிப்பிட்ட நிதியாண்டில் விண்ணப்பதாரரின் குடும்ப உறுப்பினர்கள் 100 நாட்கள் வேலையை பெறும்போது

நிதியாண்டில் விண்ணப்பதாரரின் குடும்பத்திலுள்ளோர் வேலைக்கான கூலியாகவும், வேலையில்லாக் கால நிவாரணமும் சேர்த்து 100 நாட்களுக்கான வேலைக்கான கூலியை பெறும்போது

✐ விண்ணப்பதாரரின் குடும்பத்திற்கு வேலையில்லாக் கால நிவாரணத்தை ஊராட்சி அனுமதித்து பணமாக பட்டுவாடா செய்யும். பயனாளிகள் விரும்பினால் பணப்பட்டுவாடா / வங்கி அஞ்சலகம் மூலம் அளிக்கப்படும்.

✐ இழப்பீடு

✐ திட்டப்படி குறிப்பிட்ட நாளில் கூலிப்பட்டுவாடா செய்யப்படாவிடில், சம்பளப்பட்டுவாடா சட்டம்1936ன்படி விதிகளில் உள்ள இழப்பீட்டை பெறுவதற்கு தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு.

✐ இத்திட்டப்படியான வேலையின்போது ஏற்படும் விபத்துகளின் எந்த நபருக்கு காயம் ஏற்பட்டாலும் அவர் பூரண குணமடையும் வரை இலவசமாக அருகாமையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் / சுகாதார உபமையம் / வட்டமருத்துவமனை / மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற உரிமை உண்டு.

✐ காயமடைந்த நபருக்கு மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், மாநில அரசு தங்குமிடம், வைத்தியம், மருந்து மற்றும் காயமமைந்தவர் வேலையிலிருந்தால் எவ்வளவு கூலி கிடைக்குமோ அந்த கூலி விகிதத்தில் சரிபாதிக்கு குறைவில்லாமல் தினப்படி போன்றவைகள் ஏற்பாடு செய்யும்.

✐ இத்திட்டப்படி வேலையின்போது வேலை செய்யும் நபர் விபத்தில் இறந்து விட்டாலோ அல்லது நிரந்தரமாக ஊனமுற்றாலோ அவரின் வாரிசுக்கு அல்லது ஊனமுற்றோருக்கு ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் செயல்பாட்டு அமைப்புகள் செலுத்த வேண்டும். இந்த நிதியை மத்திய அரசு அளிக்கும்.

✐ இத்திட்டப்படி வேலை செய்யும் பெண்களுடன் வரும் குழந்தைகளுக்கு விபத்தினால் காயம் ஏற்பட்டால் அக்குழந்தைக்கு பூரண குணமடையும் வரை இலவசமாக மருத்துவ சிகிச்சை பெற உரிமையுள்ளது. இறந்துவிட்டாலோ அல்லது நிரந்தரமாக ஊனமுற்றாலோ இந்திய அரசு ரூபாய் பத்தாயிரம் அளிக்கும்.

ஆதாரம் : NREGA சட்டம் செயல்பாட்டு வழிகாட்டி – (AIAWU)

# தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் – மாநிலவாரியான கூலிவிபரம்.

| வ. எண் | மாநிலம் | சட்டக்கூலி(2007–08) | கடைசியாக திருத்தப்பட்ட தேதி |
|---|---|---|---|
| | அசாம் | 66.00 | 6.8.2006 |
| | ஆந்திரா | 80.00 | 7.8.2004 |
| | அருணாச்சல பிரதேசம் | பகுத 1–65.00 பகுதி 2–67.00 | 18.8.2005 |
| | பீகார் | 77.00 | 19.2.2007 |
| | குஜராத் | 50.00 | 8.4.2004 |
| | அரியானா | 99.21 | 1.1.2007 |
| | ஹிமாச்சல் பிரதேசம் | 75.00 | 15.12.2006 |
| | ஜம்மு–காஷ்மீர் | 70.00 | |
| | கர்நாடகம் | 74.00 | 1.4.2007 |
| | கேரளா | 125.00 | 9.6.2003 |
| | மத்தியப்பிரதேசம் | 67.00 | 1.4.2007 |
| | மகாராஷ்டிரம் | 66.00 முதல் 72.00 | 14.3.2007 |
| | மணிப்பூர் | 81.40 | 15.3.2007 |
| | மேகாலயா | 70.00 | 1.6.2004 |
| | மிசோராம் | 91.00 | 7.6.2004 |
| | நாகாலாந்து | 100.00 | 8.6.2007 |
| | ஒரிசா | 70.00 | 1.5.2007 |
| | பஞ்சாப் | 93.00 முதல் 95.00 | 1.4.2006 |
| | ராஜஸ்தான் | 73.00 | 4.9.2004 |
| | சிக்கிம் | 85.00 | 1.9.2005 |
| | தமிழ்நாடு | 80.00 | 8.7.2007 |
| | திரிபுரா | 60.00 | 9.8.2005 |
| | உத்தரப்பிரதேசம் | 100.00 | 1.8.2007 |
| | மேற்குவங்கம் | 70.00 | 1.5.2007 |
| | சத்தீஸ்கர் | 66.70 | 1.4.2007 |
| | ஜார்க்கண்ட் | 76.68 | 26.12.2006 |
| | உத்தராஞ்சல் | 73.00 | |

**-நன்றி - NREGA சட்டம் செயல்பாட்டு வழிகாட்டி.**

# தீண்டாமை கொடுமை!

மதுரை மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமைக் கொடுமை அதிகமாக இருக்கிறது. இம்மாவட்டத்தில் உள்ள 60 ஊராட்சிகளில் தீண்டாமைக் கொடுமை தலைவிரித்து ஆடுகிறது. இது குறித்து நான்கு வாரங்களுக்குள் உரிய விளக்கம் அளிக்க வேண்டும்' என்று தமிழக தலைமைச் செயலருக்கு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இரு தினங்களுக்கு முன், டில்லியில் உள்ள தேசிய மனித உரிமை ஆணையத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து, தமிழக அரசு தலைமைச் செயலர் திரிபாதிக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகள் என்ற தலைப்பிட்டு, அசாமில் இருந்து வெளிவரும், 'சென்டினல்' என்ற பத்திரிகையில் செய்தி வெளி வந்துள்ளது. அதில், மதுரை மாவட்டத்திலும், அதை சுற்றியுள்ள பகுதிகளிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தீண்டாமை கொடுமை அதிகமாக இருந்து வருகிறது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. சிவ கங்கை மாவட்டத்தில், கீழவிளஞ்சான்பட்டி என்ற கிராமத்தில், ராஜு என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிறுவனுக்கு, போலியோ நோய் தடுப்பு சொட்டுமருந்து அளிப்பதற்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளது. இவனது பெற்றோருக்கு சொந்தமான நிலங்களை, மேல் ஜாதி வகுப்பினர் கட்டாயப்படுத்தி, தங்களுக்கு எழுதிக் கொடுக்கச் சொல்லியுள்ளனர். இதற்கு மறுப்பு தெரிவித்ததால், இந்த குடும்பத்தை ஊரில் இருந்து ஒதுக்கி வைத்துள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குடும்பத்தினர் ஊரின் பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்க கூடாதென்று கூறி தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மதுரைக்கு அருகே வடுகபட்டி கிராமத்தில் தாழ்த்தப் பட்டவர்கள் பிணத்தை தூக்கிக் கொண்டு, மிகவும் குறுகிய பாதை வழியாக சென்று, தங்களது மயானத்தில் அடக்கம் செய்கின்றனர். இந்த வழி முழுவதும் காலில் குத்தும் அளவுக்கும் அதிகமாக முள் குவித்து இடையூறு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இங்குள்ள கிராமத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனியாக ரேஷன் கடைகள் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. காஞ்சிரான்பட்டி என்ற கிராமத்தில் தலித் பெண் ஒருவர் கற்பழிக்கப் பட்டார். இது குறித்து, மருத்துவமனை மூலம் உறுதி செய்யப்பட்டும் கூட, மேல்ஜாதியைச் சேர்ந்த குற்றவாளி மீது போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை. மனிதர்களின் மலத்தை சுமக்க கூடாது என்று சட்டம் இருந்தும், இங்கு மனித கழிவுகளை தலையில் சுமந்து செல்வதாகவும் அந்த செய்தி தெரிவிக்கிறது.

ஆண்டார் கோட்டராம் தனியமங்கலம் ஆகிய கிராமங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, தபால் கொடுக்க, தபால்காரர் மறுத்து வருவதாகவும், முடிதிருத்த நாவிதர் மறுப்பதாகவும், அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. உத்தமபுரம் என்ற கிராமத்தில் 500 மீட்டர் நீளத்திற்கு சுவர் எழுப்பி, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதி மறைத்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் செய்தி தெரிவிக்கிறது.

தமிழகம் முழுவதும், பல்வேறு இடங்களில் இரட்டை டம்ளர் முறை இருப்பதாகவும், சில இடங்களில் சிரட்டையில் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கடைகளில் தேநீர் வழங்கப்படுவதாகவும், ஊர் திருவிழாக்களில் பங்கேற்ற முடியாத நிலை நிலவுவதாகவும், செருப்பு போட்டு நடக்க முடியாத நிலையும், மாடுகளை ஜல்லிக்கட்டுகளில் பங்கேற்க விடாத நிலை நிலவி வருவதாகவும் அந்த செய்தி கூறுகிறது. இது போன்ற நிலை, 60 கிராம

ஊராட்சிகளில் நிலவுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பத்திரிகை செய்தி உண்மையாக இருக்குமேயானால் அது வன்மையாக கண்டிக்கத்தக்கது. முழுக்க முழுக்க மனித உரிமை மீறல் சம்பவம். இதுகுறித்து நான்கு வாரங்களுக்குள் உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த நோட்டீசில் கூறப்பட்டுள்ளது.

**தினமலர், 23.03.2008**

## பஞ்சாயத்து நிர்வாகம் மாநில பட்டியலிலேயே தொடரும்

பஞ்சாயத்து நிர்வாகம் மத்திய அரசு பட்டியலுக்கோ பொதுப் பட்டியலுக்கோ மாற்றப்படாது. மாநில பட்டியலிலே தொடரும் என்று பஞ்சாயத்து நிர்வாகத்துறை அமைச்சர் மணிசங்கர் அய்யர் கூறினார்.

மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் பங்கேற்கும் 3–நாள் தேசிய மாநாடு தில்லியில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. மாநாட்டைத் தொடங்கி வைத்து பேசுகையில் இத் தகவலை அவர் கூறினார். பஞ்சாயத்து நிர்வாகம் தொடர்பான வரைவு சாசனத்தில் "ஊராட்சிகள்" என்ற பொருளை மாநில அரசுப் பட்டியலில் இருந்து மத்திய பட்டியலுக்கு மாற்றுவது, ஊராட்சிகள் தொடர்பாக மாநில அரசின் அதிகாரங்களை குறைப்பது போன்ற ஆட்சேபத்துக்குரிய பரிந்துரைகள் இடம் பெற்றுள்ளன என்று கூறி தமிழக பிரதிநிதிகள் யாரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று தமிழக அரசு அறிவித்திருந்தது. இந்த நிலையில், பஞ்சாயத்து நிர்வாகம் மாநிலப் பட்டியலிலே தொடரும் என்று மத்திய அமைச்சர் மணி சங்கர் அறிவித்துள்ளார்.

பஞ்சாயத்தில் சுயாட்சி: பஞ்சாயத்து நிர்வாகத்தில் சுயாட்சியை மேம்படுத்த வேண்டும என்று மணிசங்கர் அய்யர் வலியுறுத்தினார். பஞ்சாயத்து நிர்வாகம் சிறந்த முறையில் இருப்பதோடு தன்னாட்சி கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். பஞ்சாயத்து ஆட்சி முறை நம் நாட்டில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் சிறந்த நிர்வாகம்: பஞ்சாயத்துகளின் வளர்ச்சி எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக இல்லை. மாநிலத்துக்கும் மாநிலம் வித்தியாசப்படுகிறது. தமிழகத்தில் பஞ்சாயத்து நிர்வாகம் சிறப்பாக உள்ளதாக பல்வேறு அமைப்புகள் பாராட்டி உள்ளன. அதேசமயம் ஜார்க்கண்ட மாநிலம் பஞ்சாயத்து நிர்வாகத்தில் மிகவும் பின்தங்கியுள்ளது. வடகிழக்கு மாநிலங்களில் பஞ்சாயத்து நிர்வாகம் திறம்பட செயல்பட்டு வருகின்றன. வளர்ச்சி ஏற்பட்டுள்ளது உண்மைதான். ஆனால் வளர்ச்சி ஒரே மாதிரியாக இல்லை. அசாம் மாநிலம் முன்மாதிரியாக உள்ளது என்றார் அவர். பஞ்சாயத்துகளுக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இணையதள வசதி மூலம் பஞ்சாயத்து நிர்வாகத்தை பொதுமக்கள் தொடர்பு கொண்டு தங்கள் கோரிக்கைகளை தெரிவிக்க வசதி செய்யப்படும் என்றார் அய்யர். மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங், ஐக்கிய முற்போக்கு கூட்டணித் தலைவர் சோனியாகாந்தி ஆகியோர் புதன்கிழமை பேசுகின்றனர். மாநாட்டில் பஞ்சாயத்து நிர்வாகம் குறித்த வரைவு சாசனம் வெளியிடப்படுகிறது.

தினமணி, 23.04.2008

# 'தூலா ரத்னம்' அவர்களுக்கு சாதனை பெண் பஞ்சாயத்து உறுப்பினர் விருது

21, ஏப்ரல் 2008 அன்று ஆந்திரப்பிரதேச மாநிலம், கிழக்கு கோதாவரி மாவட்டம், சுருங்கவிருக்ஷம் ஊராட்சி மன்றத் தலைவரும், தன் பேரன் வீரபாபுவுடன் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட வரும் ஆன திருமிகு. தூலா ரத்னம் அவர்களுக்கு அவர் இறப்பிற்கு பின்னர் பெண் பஞ்சாயத்து சாதனை உறுப்பினர் விருது புதுதில்லியில் 'இன்ஸ்ட்டியூட் ஆப் சோசியல் சயின்ஸ்' என்ற நிறுவனத்தால் வழங்கப்பட்டது. இந்த விருது தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திருமிகு.சாந்தா சின்கா அவர்களால் மறைந்த தூலா ரத்னம் அவர்களின் கணவர் மற்றும் குடும்பத்தினரிடம் வழங்கப்பட்டது.

48 வயதான தூலா ரத்னம், சுருங்கவிருக்ஷரம் கிராம ஊராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஆவார். அவர் ஊராட்சி மன்றத்தில் ஊழலை எதிர்த்து போராடினார். அவரின் எதிரிகள், அவர் ஆகஸ்ட் 2006 தேர்தலில் போட்டியிடுவதை தடுத்து நிறுத்த முயற்சித்தனர். அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை. தேர்தலில் வென்றவுடன், தினக் கூலித் தொழிலாளியான தூலா ரத்னம், ஒரு பொறுப்பான பஞ்சாயத்து உறுப்பினராக செயல்பட்டார். பஞ்சாயத்து செலவினங்களுக்கான கணக்குப் பதிவேடுகள் எங்கே ? தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தில் வருகைப் பதிவேட்டில் பொய்யான பெயர்கள் ஏன் இணைக்கப்பட்டுள்ளன ? அவர்களுக்கு கூலி ஏன் அளிக்கப்பட்டது.. ரேஷன் கடைகளுக்கு வரும் அரிசி எங்கே செல்கிறது ? கிராம சபையின் ஒப்புதல் இல்லாமல் பயனாளிகள் பட்டியல் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ? போன்ற கேள்விகளை தூலா எழுப்பியவுடன், எதிரிகள் அவர் குரலை அடக்கப்பார்த்தார்கள்.

தொடர்ந்த போராட்டங்களினால் தூலா அவர்கள் கிராம மக்களின் நல்ல மதிப்பையும் ஆதரவையும் பெற்றார். தூலா உயிரோடு இருக்கும் வரை தாம் ஊழல் போன்ற பிற செயல்களில் ஈடுபட முடியாது என்று எண்ணியவர்கள் 2007 ஜீலை மாதம் 14ம் தேதி இரவு தூலா அவர்களையும், அவரோடு இருந்த அவரின் பேரன் வீரபாபுவையும் உயிரோடு கொளுத்தி விட்டனர்.

''தூலா ரத்தினம் அவர்களின் வாழ்க்கை சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கான துணிச்சலான போராட்டத்தின் ஒரு காவியம். நாடெங்கிலும் உள்ள பல்வேறு பெண் ஊராட்சி மன்றத் தலைவர்கள் சந்தித்து வரும் தடைகள் மற்றும் போராட்டங்களின் வடிவமே தூலா ரத்னம். எந்த கிராம மக்களிடமிருந்து குறிப்பாக ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட பாகுபடுத்தப்பட்ட மக்களிடமிருந்து தூலா ரத்னம் தன்னுடைய பலம், தன்னம்பிக்கையை பெற்றாரே, அவர்களுக்காக அவர் ஒரு உண்மையான தலைவராக செயல்படும் ஜனநாயகக் கடமையிலிருந்தது அவரை எந்த வலிமை வாய்ந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியவில்லை'' என்று அவருக்கு அளிக்கப்பட்ட விருதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

–நன்றி ''பஞ்சாயத்து ராஜ்அப்டேட் ஏப்ரல் 08''

# புஷ் இந்தியா உணவுப் பற்றாக்குறை!!

இந்தியர்கள் அதிகமாக சாப்பிடுவதால்தான் உலகம் முழுவதும் உணவுப்பொருள்களின் விலை ஏறிவிட்டது என்று பேசியுள்ளார் அமெரிக்க அதிபர் ஜார்ஜ்புஷ். உலகின் சில நாடுகளில், ஒரு வாரத்தில் வாங்குகிற உணவுப் பொருள்களின் அளவும் குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கையும் ஒரு ஒப்பீட்டுக்காக.

| வ. எண் | நாடு | குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை | | | மொத்தம் | வாராந்திர உணவுச் செலவு ரூ |
|---|---|---|---|---|---|---|
| | | பெரியவர்கள் | வாலிபர்கள் | குழந்தைகள் | | |
| 1 | ஜெர்மனி | 2 பேர் | 2 பேர் | – | 4 பேர் | 21,000/– |
| 2 | ஜப்பான் | 2 பேர் | 2 பேர் | – | 4 பேர் | 13,325/– |
| 3 | இத்தாலி | 2 பேர் | – | 2 பேர் | 4 பேர் | 10,920/– |
| 4 | அமெரிக்கா | 2 பேர் | 2 பேர் | – | 4 பேர் | 14,370/– |
| 5 | மெக்சிகோ | 2 பேர் | – | 3 பேர் | 5 பேர் | 7,942/– |
| 6 | ஈக்வடார் | 4 பேர் | 4 பேர் | – | 8 பேர் | 1,893/– |
| 7 | போலந்து | 4 பேர் | – | 1 பேர் | 5 பேர் | 6,353/– |
| 8 | பூடான் | 7 பேர் | – | 6 பேர் | 13 பேர் | 211/– |
| 7 | எகிப்து | 7 பேர் | – | 5 பேர் | 12 பேர் | 2,878/– |
| 8 | சாட் | 3 பேர் | – | 2 பேர் | 5 பேர் | 52/– |

**இந்தியா:**

போதிய உணவில்லாததால் ஊட்டச்சத்துக் குறைவால் அவதிப்படும் குழந்தைகள் 50 சதவீதத்திற்கு அதிகம். ஊட்டச்சத்து கிடைக்காமல் துயருரும் கர்ப்பிணிப் பெண்கள் 78 சதவீதம். இந்திய மக்களில் 78 சதவீதத்தினரது தினசரி வருவாய்: ரூ.20 க்கும் குறைவு. இப்போது ஒவ்வொரு இந்தியரும் உட்கொள்ளும் சராசரி தானியம் 412கிராம், பருப்பு அளவு 33 கிராம்.

**–நன்றி "வண்ணக்கதிர்"**

வெளியீடு

**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)**

எண்.10, தாமஸ்நகர், சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

தொ.பே. 044-22353503, தொ.நகல். 22355905

மின் அஞ்சல் : hrf@md3.vsnl.net.in இணையதளம் : www.voicesofstruggletn.org